THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

“வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்”.

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941, ஆகஸ்டு—விசு, ஆவணி | இதழ் ௮

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை யிது நீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பே னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீ மறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்சோதி எனக்கு விரைந் தருளே.

இராமலிங்க சுவாமிகள்.

உன்னை மறந்திடுவேனோ? மறப்பறியேன். மறந்தால், உயிர் விடுவேன்; கணந்தரியேன். இது உன்னாணை. நீ, என்னை மறந்திடுவாயோ? மறந்திடுவாயெனில், யான் என்ன செய்வேன்? எங்குறுவேன்? எவர்க்குரைப்பேன்? எந்தாய்! அன்னையினும் தயவுடையாய்! நீ மறந்தா யெனினும், அகிலமெ (ல்) லாம் அளித்திடு(ம்) நின்னருள் மறவாது என்றே இன்னு(ம்) மிகக் களித்து இங்கே இருக்கின்றேன். மறவேல், இது தருணம். அருட் சோதி! எனக்கு விரைந்தருளே.

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

I. அ. " இன்பந்தேடி இயங்கு மாந்தர்காள்
இன்ப மீர நெஞ்சிற் றேடாது
பொன்னிற்றேடி புவியி லுழல்வீர்
பொன்னின் மட்டு மின்ப முண்டாமோ?"

ஆ. " நீரிலா நிலந்தனி னெற்பயிர் விளையுமோ
ஈரமி னெஞ்சிலின்பம் விளையுமோ
ஈரநெஞ் சர்க்கே யின்ப மியல்பாம்
ஈரமினெஞ் சர்துன் புறுவ தியல்பே."

செந்தமிழ்ச் செல்வி.

II அ. தன்னலமும் ஒரு பொல்லாத நோயாகும். நமக்கு எப்பொழுதும் நாம் என்கிற அகங்காரம் இருந்தால், நமக்கு என்கிற பேராசை இருந்தால், நாம் சொல்லுவதுதான் சரி என்று நாம் பிடிவாதம் பண்ணினால், தன்னலத்துக்காகப் பணம் சம்பாதிப்பதையே நாம் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டால், நாம் நோயாளி வகுப்பைச் சேர்ந்தவர்களாவோம்; ஆனால், நாம் தன்னலம் கைம்மாறு கருதாது பிறருக்கு உழைத்தால், தொண்டு செய்தால், பிறர் மனம் புண்படாதவாறு நடந்தால், தன்னலப் போட்டியை ஆதாரமாகக் கொண்ட உலக நடைமுறையைக் கூட்டுறவாகவும் ஒத்துழைப்பாகவும் மாற்ற முயன்றால், நாம் நோய் தீர்க்கும் வைத்தியர் வகுப்பைச் சேர்ந்தவர்களாவோம்.

நல்வழி. Dr. Stanley Jones.

ஆ. வருத்தமே அறியாத அனேகரால் பிறர் துன்பத்திற்கும் இரங்க முடிவதில்லை. ஆள் மாதிரி வளர்ந்திருக்கும் வாலில்லாக் குரங்கும் (Gorilla) ஏக பத்தினி விரதம் காக்கிறது. மனிதன் சாராயம் கோடி கோடி காலன் (Gallon) குடிக்க; குரங்குகள் கொஞ்சங்கூடக் குடிக்கிறதில்லை. மனிதன் தன் இனத்தைக் கோடிக் கணக்காகக்கொல்லுவதே ஆண்மைத் தனமென்று கொன்றுகொண்டிருக்க, மாமிசமே புசித்து வளருகிற புலியும் தன் இனத்திற்கு ஒரு தீங்கும் செய்வதில்லை. நம்மையே முக்கியமாகப் பெரிதாக நினைத்து எதொரு காரியத்தையும் முடிவு செய்வது ஆபத்திற் கிடமாகும். இந்த உலகத்திலே நம்மைத் தவிர எத்தனையோ பேர் இருக்கின்றனர் என்பது நம் ஞாபகத்திலிருக்க வேண்டும்.

ககவா பண்டிதர்.

III. அவ்வந் நாட்டின் மொழி வளர்ச்சியே ஆண்டுறையும் மக்களின் முழுவுயர்ச்சிக்கும் முதற்காரணம். தமிழர் மனம் தமிழ்க்காகும் அன்றே நம் தமிழுரிமை உரம்பெறும்; உலகெங்குந் தமிழ் நலம் நிலவும்; அமைதியும் அமையும்.

தமிழ் தழீஇய ஒழுக்கம் மிக்கோர், வறுமை அடிமை முதலிய புன்மையினின்றும் விலகி, செம்மை தலைமை முதலிய மேன்மையிற் செழித்து மகிழ்வுடன் வாழ்வர்.

தமிழணங்கு ஆசிரியன்.

3. தலையங்கம் :

தபசில் வகுப்பினரும் பின்னடைந்த வகுப்பினரும் முன்னேறுவதெப்படி?

III

தம் கையே தமக்குதவ வேண்டும்.

பனையேறுகிறவர்க்கு ஒருவர் தோள்தான் கொடுக்கக்கூடுமேயன்றி அதற்கு மேலும்உதவ முடியாது. அதற்கு மேல் உதவுவதென்றாலும் அதனைத் தூக்கிச் சுமப்பதாகச் சொல்லக் கூடுமேயன்றி உதவுவதாகச் சொல்லமுடியாது. இன முன்னேற்ற வேலைகளிலும் இனத்தார் ஒவ்வொருவரையும் உற்சாகப் படுத்தலாம்; ஆரம்பத்தில் அவர்களுக்கு இன்றியமையாத உதவிகளையும் செய்யலாம்; அதற்கு மேல் செய்யவும் செய்துகொண்டேயிருக்கவும்சாத்தியப்படாது; அப்படியே செய்து வருவதென்றாலும், உதவியைப் பெற்று வருகிறவர் தாமாகத் தம் காரியத்தை எந்த நிலையிலும் செய்து கொள்ள முடியாதவராய் விடுவதுமன்றி, பிறர் உதவி நின்றதும் தம்முடைய காரியத்தைப் பார்க்க முடியாமல் நிறுத்திக் கொள்ளவும் செய்வார்; அதுவரை செய்து வந்ததும், அனேகமாகப் பயன்படாது போய்விடும். அத்தகையோருக்கு நாம் உதவி செய்வதால், நம்மைச் சிரமப்படுத்திக் கொள்ளுவதுமல்லாமல், அவர்களையும் கெடுத்தவர்களாவோம். அத்தகையோர்க்கு உதவி செய்யாதிருந்திடுவதால், அவ்வளவிற்குப் பிறருக்கேனும் நாம் பயன்படக்கூடும்.

தம் கையே தமக்குதவியாக, தலைவர்கள் தொண்டர்கள் தாமேதற்கு?

அங்கங்கே இருக்கும் இனச் செல்வர்கள் தம் இனத்தைத் தாங்கி வந்திருப்பின், அந்த இனமும் தாழ்ந்தேனும் பின்னடைந்தேனும் போயிருக்கக் கூடியதில்லை. இப்பொழுதும், அவர்களே தலைவர்களாகவும் தொண்டர்களாகவும் உதவுவார்களாயின் அதுவே சிறந்ததாகும். அப்படி அமைவதற்குக் கொஞ்சகாலமேனும் ஆகவேண்டிய திருக்குமாதலால், பிற இடங்களிலிருந்தேனும் தலைவர்களும் தொண்டர்களும் வந்து வேலை செய்ய வேண்டுமென்கிறோம். 'கெட்டார்க் குற்றார் கிளையிலுமில்லை' என்றபடி கெட்டுப்போயிருக்கிறவர்களுக்கு உண்மையானவர்கள் உதவக்கூடியவர்கள் உற்றாரிலும் அமைவதில்லை. அவர்களுக்கு உள்ளூர் இனச்செல்வர்களிடத்திலும் சாதாரணமாக நம்பிக்கையேற்படுவதில்லை. நாம் முன் சொல்லியபடி இனத்தாரின் உண்மையான நிலைமை தெரிந்தால் தான், அவர்களுடைய நிலைமையைத் திருத்துவதற்கான யோசனையும் சொல்ல முடியும்; உதவியும் செய்யமுடியும். தமக்காக இரங்கக்கூடிய எவரையும் அதுவரை காணாதவர்-அப்படி ஒருவரைக் கண்டபொழுது தான், அவரிடம் தம் இரகசியங்களையும் ஒளிக்காமல் சொல்ல முடியும். நம் குடும்பங்களாலோ இனத்திலோ ஊரிலோ நாட்டிலோ அன்பும் ஆதரவும் இல்லாத காரணமாகவே சங்கடங்கள் வளருவதைக் காண்கிறோம்; அன்பும் ஆதரவும் பெருகப் பெருகச் சங்கடங்கள் ஒழிவதையும் காண்கிறோம். அத்தகைய அன்பையும் ஆதரவையும் இனத்தாரிடைப் பெருக்குவதற்காகவே தலைவர்களும் தொண்டர்களும் முக்கியமாக வேண்டும். அவர்கள் இனத்தாருக்குப் பலவகையிலும் உதவக் கூடியவர்களாகவும் யோசனை சொல்லக் கூடியவர்களாகவுமிருக்க வேண்டும். அவர்கள் தங்களுக்கெதேனும் தெரியாத காரணமாக யோசனை சொல்ல முடியாதிருக்கும் நிலைமையில், தெரிந்தவர்க

ளைக் கேட்டுச் சொல்லுவதாகவே தங்களிடம் யோசனை கேட்பவர்களுக்குச் சொல்லவும் வேண்டும்; அப்படியே கேட்டுச் சொல்லவும் வேண்டும். அப்படிக்கில்லாது ஏதேனும் தோன்றியதைச் சொல்லி அது தவருகவும் முடியுமாகில், மற்றப்படிக்கிருக்கக் கூடிய மரியாதையும் நம்பிக்கையும் குறைந்து போகும். தலைவர்களும் தொண்டர்களும் தங்களினத்தாரைக் கண்டபொழுது அவர்களைக்குளிப்பாட்டி விடுவதாக அல்லாமல், அவர்கள் உள்ளம் என்றைக்கும் குளிர்ந்திருக்கும்படியாகச்செய்ய வேண்டும். சிறு யோசனைகளே சொல்லுவதாக இருப்பினும், அவை அவர்களின் நன்மை கருதியதாகவே இருக்கவேண்டும்; சிறு உதவிகளே செய்வதாக இருப்பினும் அவை அவர்களுக்கு நன்மை பயப்பனவாகவே இருக்க வேண்டும்.

தன்னலங் கருதாத் தியாகிகளே பொது நல ஊழியத்திற் கேற்றவர்கள்.

தனக்கெனவே வாழ்வதென்றால் அதற்கு ஒரு அளவே இருக்கக் கூடியதில்லை. அன்புடையார் பிறர்க்கென்புமுடையார் என்றபடி, தனக்கென வாழாதாரின் அறிவும் திறமையும் உழைப்பும் செல்வமும் எல்லாம் பிறர்க்கு உதவக்கூடும். இன முன்னேற்ற வேலைகள் செய்து வருவதற்கு அத்தகையார் ஒரு சிலரேனும் இருப்பின் இடைவிடாதும் தளராதும் நல்ல வேலையும் செய்து வர முடியும். அவர்களுடைய முன் மாதிரியும் உற்சாகமும் பிறரையும் முன்னேற்ற வேலைகளில் தீவிரமாக ஈடுபடச் செய்யும்.

கிராம ஆசிரியர்களேனும் இன முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுவார்களென்றால் இப்போதைய நிலைமையில் அதுவுமே பெரும் பாக்கியமாகும்

வழக்கறிஞர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொது நலவேலைகளில் ஈடுபடக்கூடியவிதமாகச் சாவகாசம் அமைகிற அளவுங்கூடப் பிறருக்கு அமைவதில்லை. இவர்களினும் வழக்கறிஞர்கள் பட்டினங்களிலேயே வசிப்பவர்களாதலால், கிராமங்களுக்கு உதவுவதும் சிரமப்படும். விடு முறை நாட்களிலன்றி என்றைக்கும் ஒரே படித்தாய் பொது நல வேலைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்குச் சாத்தியப்படுவதேயில்லை. ஆசிரியர்கள் ஆசிரியைகளெனில் என்றைக்கும் ஒரே படித்தாயும் விடுமுறை நாட்களில் அதிகமாகவும் ஈடுபடமுடியும். கிராம ஆசிரியர்கள் தங்கள் சொந்த நிலங்களைத் திருந்திய முறைப்படி சாகுபடி செய்து நல்ல மிச்சம் கண்டு வருகிறார்களென்றால், அதுவே தம் இனத்தார்க்கும் பிறர்க்கும் செய்யாமல் செய்த உதவியுமாகும். அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இன முன்னேற்றத்திற்கான உதவிகளும் செய்து வருவார்களென்றால், பிறர் பணத்தைக் கொண்டும் இனத்தார்க்குப்பேருதவி செய்தவர்களுமாவார்கள். அவர்கள் தங்கள் நடக்கையினாலும் குடும்ப வாழ்க்கையினாலும் இனத்தார்க்குப் பல வகையிலும் முன் மாதிரியாக விளங்கக் கூடும். இவற்றையே இந்தியாவின் கிராமக் கல்வி (Village education in India) என்ற அறிக்கையில் பள்ளிக்கூடம் சமூகப் பொதுவிடம் (School as a community centre) என்ற அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. புக்கர் வாஷிங்டன் கல்வி கற்ற கேம்ப்டன் கல்லூரியிலும் (Hampton Institute) அதனைப் போலவே தம் இனத்தார்க்கென அவர் நடத்தி வந்த தசுக்கிசி (Tuskegee Institute) கல்லூரியிலும், கிராம ஆசிரியப் போதனாமுறைப் பயிற்சி கொடுத்து வந்ததுடன் விவசாயமும் மற்றும் பல உப தொழில்களும் கற்பிக்கப்பட்டு வருவதின் நோக்கமும், சமூக ஊழியமே இனத் தொண்டேயாகும்.

(தொடரும்)

---

4. வேளாண்மை:

நம் மாகாணத்தின் நெல்விளைவையும் வியாபாரத்தையும் பற்றிய அறிக்கை 1934.

(IV)

அரிசி யேற்றுமதியும் இறக்குமதியும்

அ. ஏற்றுமதி

தஞ்சாவூர் கோதாவரி கிருட்டிணு சில்லாக்களிலிருந்து இலங்கைக்கும் மலாய் நாடுகளுக்கும் சிங்கப்பூருக்கும் முக்கியமாகப் புழுங்கலரிசியாகவும் கொஞ்சம் நெல்லாகவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கோதாவரி இலங்கையோடு செய்துவந்த வியாபாரம் குறைந்து வருகிறது. அந்தக் குறைவிற்கு இலங்கை பர்மா அரிசி வாங்குவதாகவும் தெரிகிறது. தஞ்சாவூரிலிருந்து முத்துச் சம்பா அல்லது வெள்ளைச் சிறுமணி முன்னிலும் அதிகமாக இலங்கைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. 160 இராத்தல் கொண்ட மூடை ஒன்றின்மேல் விலை வித்தியாசம் ரூ 2-12-0 ஆகிறது; என்றாலும், புகைவண்டிக் கட்டணம் தன் ஒன்றுக்கு (ton) ரூ 1-15-0 குறைந்திருப்பதால், ஏற்றுமதி அதிகமாகிக் கொண்டுதானிருக்கிறது.

மசூலிபட்டினம் காக்கினடா துறைமுகங்களிலிருந்து கப்பல் சத்தம் குறைவாக இருந்தும் கோதாவரி மட்ட அரிசிகள் இலங்கையில் செலவாகிறதில்லை யென்றால், தஞ்சாவூர் மட்ட அரிசிகள் செலவாகி வருவதும் சிரமமான காரியமே! புகைவண்டிக் கட்டணம் குறைந்திருந்தும் தூத்துக்குடி கொச்சி கள்ளிக்கோட்டைத்துறைமுகங்களின் வழியாக மேலக்கரைக்கும் திருநெல்வேலிக்கும் போய்ச் சேரும் பர்மா அரிசியுடன் தஞ்சாவூர் கோதாவரி மட்ட அரிசிகள் போட்டிபோட முடியவில்லை. ஆகையால், பர்மா அரிசியுடன் கோதாவரி தஞ்சாவூர் மட்டமான அரிசிகள் எந்தக் காலத்திலேனும் போட்டிபோடக் கூடுமென்பது சந்தேகமே!

நாகபட்டினம் பறங்கிப் பேட்டைத் துறைமுகங்களின் வழியாகத் தஞ்சாவூர் சிறுமணிப் புழுங்கலரிசி மலாய் நாடுகளுக்கும் சிங்கப்பூருக்கும் போய்ச் சேருகிறது. மலாய் நாடுகளிலிருந்த நம் நாட்டார் அனேகர் திரும்பி வந்து விட்டதால், அங்கும் முன்போல் அரிசி செலவாகிறதில்லை. இப்படியாக, நம் மாகாண மட்ட அரிசி இலங்கைக்கோ மலாய் நாடுகளுக்கோ பர்மா சியாம் இந்துச் சீனவோடு போட்டியாக ஏற்றுமதியாகக் கூடியதில்லை.

சென்னை அரிசி மைசூர் ஐதராபாத்து பம்பாய்க்கும், கொஞ்சமாகத் திருவனந்தபுரம் கொச்சி புதுக்கோட்டை புதுச்சேரி கோவாவிற்கும் போய்க்கொண்டிருக்கிறது. சென்னைக்கு வெளியேயிருந்து வரும் குறுணையும் புழுங்கலரிசியும் உள்நாட்டுப் பச்சரிசியும் புழுங்கலரிசியும் சென்னையிலிருந்து மைசூருக்கு அனுப்பப்படுகின்றன. மைசூரின் விளைவிற்குத் தக்கதாக, இந்த ஏற்றுமதி கூடுவதும் குறைவதுமாய் இருந்து வருவதோடு வருடத்திற்கு வருடம் குறைந்துமே வருகிறது. கோதாவரி கிருட்டிணு தீரவாச அரிசிக்குப் பெங்களூர்ச் சந்தையில் நல்ல பெயரிருந்த போதிலும் ஏற்றுமதி குறைந்தே வருகிறது. சமீபகாலமாக, மைசூரில் கிச்சிலிச் சம்பா அதிகமாக விளைந்து வந்தபோதிலும், புகைவண்டிக் கட்டணம் இன்னும் குறையுமென்றால் மட்ட அரிசியேனும் அங்கே அதிகமாகச் செலவாகி வரக்கூடும்.

கோதாவரி கிருட்டிணு தீரவாச அரிசியில் கல்லும் குறுணையும் இராதென்று ஐதராபாத்தில் நல்ல பெயருண்டு. மத்திய மாகாண அரிசி பர்மா அரிசிக்கும் கேவலமாகக் கருதப்

படுவதால், அங்கிருந்து ஐதராபாத்துக்கு அரிசி வருவதில்லை. கோதாவரி கிருட்டிண சமீபத்திலிருப்பதால், உள்ளூர் நெல்லைச் சீக்கிரமாகவே விற்றுவிட்டு, வேண்டும்பொழுது இந்த அரிசியை வியாபாரிகள் வாங்கிக்கொள்ளுகிறார்கள். உள்ளூர் விளைவில்லை யென்றால், மட்ட அரிசி அதிகமாகவும் செலவாகும். ஐதராபாத்து செக்கிந்தராபாத்து இந்த இரண்டு ஊர்களில் மட்டும் திரவாசங்களிலிருந்து வரும் அரிசியில் 60 சதமானம் செலவாகிறது. இந்த விதம் உள்ளூர் அரிசியும் செலவாகும். திரவாச அரிசியில் 60 சதமானம் பெசுவாடா வழியாகவே போகிறது. சமீபகாலமாக, வாரங்கால் கண்மாய் மேட்டுப் பிரதேசங்களிலும் உயர்ந்ததர நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

கோதாவரி கிருட்டிணவிலிருந்து பதினெண்ணாயிரம் தன் அரிசிவரை பம்பாய் தட்சணத்திலுள்ள சில பட்டினங்களுக்குப் போகிறது. இதில் மூன்றிலொரு பாகம் தென்னலி இரேப்பள்ளிச் சந்தைகளிலிருந்து போகிறது. இந்த அரிசி 246 இராத்தல் கொண்ட மூடை பர்மா அரிசியைக் காட்டிலும் ரூபா 1 கூடுதலாகக் கடக் (Godag) சந்தையில் விற்கிறது. பாகல் கோட்டைச் சந்தையில் ஹுப்ளி அரிசி ரூபாவுக்கு 23 இராத்தலாக விற்க, பெசுவாடா அரிசி 19 இராத்தலாக விற்கிறது. பர்மா அரிசி உள்ளூர் அரிசிக்கும் கேவலமாக இருந்தாலும், விலை சௌக்கியமாக இருப்பதால், பர்மா அரிசி அதிகமாகச் செலவாகிறது. புகைவண்டிக் கட்டணத்தில் மணுவுக்கு அணா 4 குறைவதாக இருந்தாலும், திரவாச அரிசியை மூடைக்குப் பன்னிரண்டு அணா குறைத்து விற்கமுடியும். அப்படிக் குறைந்த விலையும் பர்மா அரிசி விலைக்குக் கொஞ்சம் கூடுதலா யிருந்தபோதிலும், திரவாச அரிசியோடு பர்மா அரிசி போட்டிபோட முடியாது. பம்பாய்த் துறைமுகம் வழியாகக் கோவாவிற்கும் பர்மா அரிசி போவதால், அங்கே போய்க் கொண்டிருந்த தென் கன்னட அரிசியின் அளவும் குறைந்து வருகிறது.

திருவனந்தபுரத்திற்கு நெல்லூரிலிருந்து பச்சரிசியும் மதுரையிலிருந்து திருப்பூர்ச் சம்பா என்ற கிச்சிலிச் சம்பாப் புழுங்கலரிசி கொஞ்சமும் திருநெல்வேலியிலிருந்து அதன் தேவையின் பெரும் பாகமும் போய்க்கொண்டிருக்கிறது. முன்னால் மதுரை சில்லா பெரியகுளம் தாலுகாவும் திருநெல்வேலி சில்லா சங்கரன் கோவில் தாலுகாவும் தோட்டக்கூலிகளுக்கு வேண்டிய புழுங்கலரிசி அனுப்பிக் கொண்டிருந்தன. இப்பொழுது கொச்சித் துறைமுகம் வழியாகப் பர்மா அரிசி சௌக்கியமாகப் போய்ச் சேருகிறது. புதுச்சேரியின் தேவை தென்னார்க்காடு தஞ்சாவூர் செங்கற்பட்டு சென்னையிலிருந்து கிடைக்கிறது. புதுக்கோட்டையின் தேவை அனேகமாக வண்டிப் பாரமாகத் திரிசிராப்பள்ளி தஞ்சாவூர் இராமநாதபுரம் சில்லாக்களிலிருந்து போய்ச்சேருகிறது.

ஆ. இறக்குமதி

கொச்சித் துறைமுகம் போய்ச்சேரும் பர்மா அரிசி அனேகமாகக் கொச்சி திருவாங்கூர் இராச்சியங்களிலேயே செலவாகிவிடுகிறது; மற்றப்படி இறக்குமதியாகும் அரிசி 1929-30ம் வருடத்தில் நூற்றுஎழுபத்தையாயிரம் தன்னாகவும் 1933-34ம் வருடத்தில் முந்நூற்று அறுபத்தாறாயிரம் தன்னாகவுமிருந்தது. தென் கன்னடம் மலையாளம் சில்லாக்களிலும் மத்திய சில்லாக்களிலும் 1932-33, 1933-34 இரண்டு வருடங்களிலும் விளைவு திருப்திகரமா யில்லாததாலும், விலைவாசி குறைந்து போனதின் நிமித்தம் உரம் போடாது விளைந்த இடங்களிலுள்ள விளைவு குறைந்துபோனதாலும், விலை சௌக்கியமாக இருப்பதால் அதிகமாக உண்பதாலும் இருநூறாயிரம் தன் வரை அதிகமாக இறக்குமதியாகி யிருக்கிறது.

சீயாமிலிருந்தும் சீயாகோனிலிருந்தும் 1927-28 வருடத்தில்தான் சென்னைக்கு அரிசி முதல் முதல் வர ஆரம்பித்தது. அதிலிருந்து வருடத்திற்கு வருடம் அதிகமாகவும்

பல துறைமுகங்களுக்கும் வந்துகொண்டிருக்கிறது.

இந்த நாடுகளிலிருந்து ஆரம்பத்தில் குறுணையே முக்கியமாகவும் ஏகதேசம் நெல்லும் வந்துகொண்டிருந்தன. சமீபகாலமாக நெல் ஏராளமாகவும் புழுங்கலரிசியும் பச்சரிசியும் கொஞ்சமாகவும் வந்துகொண்டிருக்கின்றன. சீயாம் அரிசி நம் நாட்டு மட்ட அரிசியைப் போலிருக்கிறது. விலையும் சௌக்கியமாயிருக்கிறது. இதுவரை குறுணை வந்ததிலிருந்தே நாட்டரிசியின் விலை வெகுவாக விழுந்து வந்ததென்றால், இனிப் புழுங்கலரிசியும் வர ஆரம்பித்த பின் இன்னும் அதிகமாகவே விலை விழுந்துவிடும்.

வெகு காலமாகப் பர்மா நம் மாகாணத்தோடு நெல் வியாபாரம் செய்து வந்தபோதிலும் சண்டைக்கு முன் வரை பர்மாப் புழுங்கலரிசி நம் மாகாணத்திற்கு வந்ததில்லை. 1920ம் வருடத்திலிருந்து புழுங்கலரிசிக்காகப் பர்மாவில் அனேக அரைவை யாலைகளமைக்கப்பட்டிருப்பதால், இலங்கைக்கும் மலாய் நாடுகளுக்கும் மலையாளத்திற்கும் அது முதல் புழுங்கலரிசி அனுப்புவிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், பர்மா புழுங்கலரிசி நம் நாட்டு அரிசியைக் காட்டிலும் மிகவும் கேவலமாக இருந்தது. ஆனால், இப்பொழுது புழுங்கலரிசி தயார் செய்யும் பக்குவமும் திருந்தியிருக்கிறது. 1924-30ம் வருடத்தில் அதாவது 6 வருடத்தில் இரு நூறாயிரம் தன்னுக்கு மேலும் முந்நூறாயிரம் தன்னுக்குக் குறைவாகவும் இறக்குமதியானது. 1931-34ம் வருடத்தில் மட்டும் முந்நூறாயிரம் தன்னுக்கு மேல் ஐந்நூறாயிரம் வரை இறக்குமதியாகிறது. ஏ 1 ஏ 2 தரம் சீயாம் குறுணை 240 இராத்தல் கொண்ட மூடை ரூ5—6—0 முதல் ரூ6-6-0 வரை விற்கும் பொழுது, கோதாவரிப் புழுங்கலரிசி மூடை ரூ8-10-0 ஆக இருக்கிறது. இப்படியாக, பர்மா குறுணையரிசியோடு போட்டிபோடக்கூடிய அரிசி நம் மாகாணத்தில்லை.

நெல்லூர் ஆலைக்காரர்கள் மற்ற ஆலைக்காரர்களைக் காட்டிலும் குறுணை கலக்காதிருப்பதில் கவனமாயிருக்கிறார்கள். குறுணை பூராவையும் நிறுத்திக்கொள்ளுகிறார்கள். பர்மாவிலிருந்து குறுணை வருவதால், அதற்கும் குறைந்த விலைக்கே உள்ளூர்க் குறுணையை விற்கவேண்டியதிருக்கிறது. இந்தக் குறைவை முழு அரிசியில் சேர்த்து வைத்து விற்கவேண்டியதுமிருக்கிறது. அதற்காக நெல்லை அடித்துப் பேசிக் குறைந்த விலைக்கு வாங்கவேண்டியதிருக்கிறது. இப்படியாகவும் நெல்விலை குறைகிறது. வெளிநாட்டிலிருந்து வருடத்திற்கு வருடம் குறுணையின் வரவும் அதிகமாகிக் கொண்டு வருவதால், குறுணையை யுண்கிறவர்களும் அதிகமாகிக் கொண்டே வருகிறார்களென்று சொல்லவேண்டும். அதற்குத் தக்கதாக முழு அரிசித் தேவையும் குறைகிறது. குறுணை இறங்குகிற துறைமுகங்களில் மட்டும் உள்ளூர் அரிசித் தேவை குறைகிறதென்று சொல்லுகிறதற்கில்லை; உள் நாட்டிலுமே தேவை குறைந்து விடுகிறது.

அரிசி அனுப்பப்படவேண்டிய சேலம் மலையாளம் கோயம்புத்தூர் நீலகிரி ஜில்லாக்கள் அரிசியை யனுப்பி வருகிற கிருஷ்ணா தஞ்சாவூர் கோதாவரி நெல்லூர் ஜில்லாக்களிலிருந்து வெகு தூரத்திலிருக்கின்றன. அதனாலும் போட்டி அதிகமாகிறது. கோதாவரி கிருஷ்ணா குண்டூர் நெல்லூர் வட பாகத்துத் துறைமுகங்களெதுவும் அரிசி இறக்குமதி செய்வதில்லை. தஞ்சாவூர் ஜில்லா விளைவும் அதிகமாக இருக்கிறது. அதனோடு கடலூர் நாகபட்டினத் துறைமுகங்களிலும் அரிசி இறக்குமதியாவதால், அப்படி இறக்குமதியாகும் அரிசியின் போட்டியும் அதிகமாக இருக்கிறது.

மலையாளம் கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்குக் கோதாவரியிலிருந்து புழுங்கலரிசி போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது கள்ளிக்கோட்டை போய்ச் சேருகிற பர்மா அரிசி இரண்டு மணு மூடையின் பேரில் கோதாவரி

அரிசியைக் காட்டிலும் 4 அணு சௌக்கிய மாக விற்கிறது. இதனால், கோதாவரி அரிசி இறக்குமதி வெகுவாகக் குறைந்து வருகிறது. குறுணை அரிசி இறக்குமதியாவதால், மற்றத் தானியங்களின் விலையும் விழுந்துவிடுகிறது; தானியங்களின் விலை விழுந்துபோகவே, அரிசி யின் விலையும் விழுந்து போகிறது.

பஞ்சாபிலிருந்து அமிர்த சார் அல்லது தில்லி (Delhi) அரிசி என்றொரு உயர்ந்த அரிசி மகம்மதியர்களுக்காகவும் குசராத்தி களுக்காகவும் சென்னைக்கு வரவழைக்கப் படுகிறது. மூன்று மணுக்கொண்ட ஒரு மூடை உள்ளூர் அரிசி ரூ 9-10-0 ஆக இருக் கும்பொழுது ரூ15முதல் ரூ 18 வரை விற் கிறது.

கல்கத்தாவிலிருந்து சீத்தாசாலி என்ற ஓர் உயர்ந்ததரப் புழுங்கலரிசி கப்பலிலும் புகை வண்டியிலும் சென்னைக்கும் கோயம்புத்தூருக் கும் மேலக்கரைக்கும் வந்துகொண்டிருக் கிறது. இப்பொழுது உள்ளூர் அரிசியின் விலையே விழுந்திருப்பதால், இந்த அரிசி அதிக மாக வருவதில்லை.

பம்பாய் மாகாணத்திலிருந்து மலையாளம் தென் கன்னடம் சில்லாக்களுக்கு மேலக்கரைத் துறைமுகங்களின் வழியாக நெல் அதிகமாக வும் அரிசி கொஞ்சமாகவும் வந்துகொண்டிருந் தது. இப்பொழுது நெல்லின் வரவு குறைந் தும் அரிசியின் வரவு அதிகமாகியும் வருகி றது. பம்பாயிலிருந்து வருகிற நெல் நீள மாக இருப்பதால், இந்தக் குறுணையரிசியை உள்ளூர்க் குறுணையரிசிக்கும் பிரியமாக மலை யாள மத்திய வகுப்பினர் வாங்கி உபயோகிக் கின்றனர்.

விசயநகரம் சந்தைக்கு மத்திய மாகாண அரிசியும் வருவதால், கோதாவரி அரிசிக்குப் போட்டி ஏற்படுகிறது. மைசூர் அரிசி தென் கன்னடம் வட ஆற்காடு சில்லாக்களிலும் ஈரோடிலும் விற்பனையாகிறது. குடகு நெல்லை மாப்பிள்ளை வியாபாரிகள் மொத்தமாக வாங் கிக் கட்டி வைத்துப் பின் மலையாளத்தில் விற் கின்றனர். இதில் குறுணையதிகமாக இருப்ப தில்லை.

(கிராமந்தோறும் விபசாயிகள் சங்கம் மிராசுதார் சங்கம், உழவர் சங்கமென எப் பெயர் கொண்டேனும் விபசாயிகள் சங்க மிருந்து வரவேண்டும். அவை விபசாயத்தை விருத்தியாகச் செய்து வரவும் விபசாயிகளின் நன்மைக்கான வேலைகள் பலவும் விடாது செய்து வரவும் பாதகங்களைக் கூடுமானால் வரு முன்னேயும் தவிர்த்து வரவும் வேண்டும். பொது அமைப்பும் ஒற்றுமையும் இல்லாததி னாலேயே விபசாயிகள் கெட்டு வருகின்றனர். இந்த அறிக்கையின் சாரத்தை வாசித்தவர்கள் பாதுகாப்பின் அவசியத்தையும் உணர்ந்திருப் பார்கள். என்றாலும், இரண்டாம் மலர் 240-242ம் பக்கங்களில் வந்திருக்கும் வெளிநாட்டு அரிசிக்கும் நெல்லுக்கும் பாதுகாப்பு வரி விதிக்கவேண்டும் என்ற கட்டுரையையும் முதல் மலரில் ஏப்பிரல் முதல் சூலை முடிய வந்துள்ள பயிரிடுவோர் பெறத்தக்க சௌகரியங்களையும் படிக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம். ப—ர்.)

---

5. கூட்டுறவு:

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை

XI

சில கழக முடிவுகள் நியாயமாகவுமில்லை.

நல்ல சங்கங்கள் வெகு காலமாகச் சிரமப் பட்டுச் சேர்த்து வைத்திருக்கும் சேம நிதியைச் சங்கங்களைத் தாறுமாறாக நடத்திக்கெடுத்திருப் பவர்களுக் காதரவாக அப்படிக் கெட்டுப் போயிருக்கும் சங்கங்களுக்கு உயிர்ப்பிப்பதற் காக உதவலாமென்று சிபார்சு செய்திருப்பது

கொஞ்சமும் நியாயமாகஇல்லை. தற்காலிகமாகத் தான் அப்படி உதவும்படியாகக் கோரப்படுகிற தென்றாலும், அப்படி உதவப்படும் தொகைக்கு ஆதாரவுதானென்ன? அதனைத்திரும்பக் கொடுப்பது தான் எப்பொழுது? என்ற விபரங்களும் தெரியவில்லை. ஒருவருக்கொருவர் உதவுகிறது தான் கூட்டுறவென்றால், நாணயக்காரர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுகிறதுதான் கூட்டுறவாகுமேயன்றி, நாணயமாக வாழ்கிறவர்கள் அவ்வுணர்ச்சியே யில்லாதவர்கள், அவ்வுணர்ச்சி குறைந்தவர்களுக்கு இனும் வழங்கி வருகிறது கூட்டுறவாகமாட்டாது.

கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரணமாக வரையறுக்கப்பட்ட பொறுப்பாக இருக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதற்கும் அருத்தமில்லை வரையறுக்கப்பட்ட பொறுப்பாக இருந்தால் தான் பணக்காரர்கள் சங்கங்களில் சேரக்கூடுமென்றும் ஆகையால் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. பணக்காரர்கள் எவரும் அப்படிச் சொல்லவில்லை. அவர்கள் சங்கங்களில் சேர்ந்தால் பணம் அதிகமாக வருமென்பதற்கு என்ன உறுதி யிருந்ததோ அதுவுந் தெரியவில்லை. பணக்காரர்கள் சேர்ந்திருக்கும் சங்கங்களில் அவர்கள் பங்குத் தொகையாக இருப்புத் தொகையாக அதிகப்பணம் போட்டிருக்கிறார்களென்றால், அதனை வைத்துச் சொல்லுகிறதாக நினைக்கலாம். வரையறுக்கப்பட்ட சங்கங்களில் அப்படிப் போட்டிருப்பவர்களையும் காணவில்லை.

கெட்ட சங்கங்களின் சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால், வரையறுக்கப்படாத பொறுப்பினால் கெட்டுப் போனதாக இல்லை; வரவு செலவிற்குப் போதிய பணமில்லாததால் கெட்டுப் போனதாகவுமில்லை; நாணயமில்லாதவர்கள் விரும்பத்தகாதவர்கள் அவற்றில் சேர்ந்து அவற்றை யோக்கியமாக நடத்தாத காரணமாகவே கெட்டுப் போனவைகளாக இருக்கின்றன. அப்படியிருக்க, சங்கங்களை நடத்த யோக்கியர்களைத் தேடுவதற்கு அருத்தமுண்டேயொழியப் பணக்காரர்களைத் தேடுவதற்கு அருத்தமில்லை. பணக்காரர்களே சங்கங்களை நடத்திவரும்பொழுது அதன் வரையறுக்கப்படாத பொறுப்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதுமில்லை.

வரையறுக்கப்படாத சங்கங்களின் நிகர மதிப்பில் எட்டிலொரு பங்கு கடன் கொடுக்கக் கூடிய நிலைமையில் பணக்காரர்கள் சேர்ந்தார்களென்றால், அவர்கள் சொத்தையிட்டுச் சங்கத்திற்குக் கடனும் மொத்தத்தில் அதிகமாகக் கிடைக்கக் கூடும். அவ்வளவிற்கு மற்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் சொத்துக்கும் சாமீனுக்கும் ஏற்பத் தாராளமாகவும் கடன் வாங்கிக் கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட பொறுப்பில் பணக்காரர்களுடைய சொத்தின் மதிப்பினால் மற்றவர்களுக்கு ஒரு பயனுமில்லை. மற்றவர்கள், அவரவர்கள் பங்குத்தொகைக்கு மூன்று மடங்கோ ஐந்து மடங்கோதான் கடன் வாங்கிக் கொள்ள முடியும். வரையறுக்கப்படாத சங்கங்களுக்குப் பாங்குகள் கொடுக்கும் கடன்கள் எப்படியும் அனேகமாக வசூலாகி விடுகின்றன; வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சங்கத்துக்குக் கொடுத்த கடன்களோ, அப்படி வசூலிக்க முடிவதில்லை. ஆகையால், பாங்குகளும் வரையறுக்கப்படாத சங்கங்களுக்குக் கடன் கொடுக்கிறமாதிரி தாராளமாக வரையறுக்கப்பட்ட சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. இருப்புத் தொகைகள் (Fixed Deposits) கிடைப்பது முக்கியமாக நிருவாகத்தைப் பொறுத்ததேயாகும்; சொல்லப் போனால், வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சங்கத்தின் மேலும் வரையறுக்கப்பட்ட சங்கங்களுக்கே கடன் கொடுக்கும் பாங்கின் மேலும் நம்பிக்கை குறையலாம்.

சப்பானில் வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சங்கங்களாக இருந்தவற்றையும், 1932ம் வருடச் சட்டத்தின்படி, வரையறுக்கப்படாத அல்லது உத்திரவாதஞ்செய்யப்பட்ட பொறுப்புச் சங்கங்களாக மாற்றப்பட்டிருக்கிறது.

மத்திய காலக்கடன்கள் (Interim loans) சாத்தியமாவதற்கான யோசனைகளும் சொல்லப்படவில்லை.

குறுகிய காலக் கடன் சாதாரணமாக ஒரு மகசூல் கால அளவிற்குத்தான் இருக்கலாமென்றும் இரண்டு வருடத்திற்கு மேற்போகக் கூடாதென்றும் தீராப்பொறியாக வேண்டுமென்றாலும் பின்னும் ஒரு வருடம் தான் நீட்டித்தரலாமென்றும் சொல்லப்படுகிறது. நீண்ட காலக் கடன்கள் கொடுக்க நில அடைமானப் பாங்குகளும் சமீபத்திலேற்பட்டு 15 முதல் 20 வருடங்களுக்குக் கடன்கள் கொடுத்து வருகின்றன. மூன்று வருடங்களுக்கு மேற்பட்டும் ஏழு வருடங்கள் வரைக்கும் விபசாயிகளுக்குக் கடன் தேவையாகவுமிருக்கிறது. அதற்கான ஏற்பாடு செய்யாதவரை கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் குறுகிய காலக் கடன்கள் அதற்காக உபயோகப் படுத்தப்பட்டும் வருகின்றன. மத்திய காலக் கடன்கள் உதவுவதற்கு ஒரு வழி செய்யாமல் இப்போதைய நடைமுறையைப் பிசகென்று சொல்லிக் கொண்டிருப்பதால் காரியங்கள் திருந்திவிடுமா? இதுவரை திருந்தாதது, இனி எப்படித் திருந்திவிடும்!

சாதாரணக் கூட்டுறவாளர்களாக மாநாடு கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ளமுடியாத சிக்கல்களுக்கும் விமோசனம் பிறக்கவேண்டுமென்பதாகத் தானே கழகம் நியமிக்கப்பட்டது? பணக்காரர்கள் ஏராளமாகச் சேருவதற்காகச் சாதாரண வரையறுக்கப்படாத பொறுப்பும் வரையறுக்கப் பட்டதாக வேண்டுமென்று சிபார்சு செய்யும் கழகம் பாங்குகளில் தனி நபராதிக்கம் கூடாதென்பதற்கு அருத்தமில்லையே? அவர்களுக்கிடந்தராத, அவர்களை விலக்கும் பாங்குகளில் அவர்கள் எப்படிப் பணத்தைக் கொண்டுவந்து கொட்டிவிடுவார்கள்? கூட்டுறவியக்கத்தில் யோக்கியதையுள்ளவர்கள் திறமை வாய்ந்தவர்கள் பிறர் நல்வாழ்வில் விருப்பமுடையவர்களாக இருந்தால், அவர்களத்தனைபெயரும் ஏழைகளாயினும் பணக்காரர்களாயினும் சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி வருவதே முறையாகும். மத்தியகாலக் கடனுக்கும் வேண்டும் ஏற்பாடுகள் சீக்கிரமாக அவசியம் செய்தாகவேண்டும்.

நில அடைமானப் பாங்குகள் வெளியிடுகிற பாண்டுகளைக் காட்டிலும் சுருங்கிய காலப் பாண்டுகள் வெளியிட்டு வேண்டும் தொகை பெறக்கூடியதா யிருந்தாலும், அது நில அடைமானப் பாங்குப் பாண்டுகளுக்குப் போட்டியாக முடியும். ஆகையால், அதனைப் பற்றி யோசிப்பதற்கில்லை. மத்திய பாங்குகளில், தனி நபர்களுக்குப் பணக்காரர்களுக்காதிக்கமும் கொடுத்து மாற்றிக்கொள்ளக் கூடிய (Transferable) ஆனல், வாபசு வாங்கிக்கொள்ளமுடியாத (not withdrawable) பங்குகளுக்கும் இடம் தந்து அப்படிப் பங்குகள் ஏராளமாக எடுத்துவரப் பணக்காரர்களையும் தூண்டலாம். கோவில்களிலும் தல தாபனங்களிலும் ஈடுசெய்கின்ற கழகங்களி (Insurance companies) லும் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கிடையில் தேவையில்லாத பணங்களும் ஏராளமாக இருந்து வருகின்றன. அப்படிப் பணங்களையும் பெற்று மூன்று வருடத்திற்கு மேற்பட்டு ஏழு வருடங்களுக் குள்ளாகத் திரும்பச் செலுத்திவிட வேண்டிய மத்திய காலக் கடன்களாகக் கொடுத்து வரலாம்.

சங்கங்களின் பங்குத் தொகை சேம நிதியின் அளவு சங்கத்தில் மத்திய காலக் கடன் இருக்கலாமென்றும், பாங்கின் பங்குத் தொகை சேம நிதிக்குத் தக்கதாகப் பாங்கு மத்திய காலக்கடனைக் கொடுத்து வரலாமென்றும் சொல்லப்படும் நிலைமையில் இத்தகைய சங்கங்களுக்குத்தான் கொடுக்கலாம், இன்னின்ன காரியங்களுக்குத்தான் கொடுக்கலாம், இவ்வளவுதான் கொடுக்கலாம், இவ்வளவு காலத்திற்குத்தான் கொடுக்கலாம், சங்கங்களும் இத்தகைய உறுப்பினர்களுக்குத்தான்

கொடுக்கலாம் என்றெல்லாம் கழகம் யோசனை சொல்லி யிருக்கலாம். கழகம் அப்படியும் சொல்லவில்லை.

சாமானியர்களுடைய தேவைகளையும் சங் கடங்களையும் அவர்களையே பார்த்தும் அவர் களிடமே கேட்டும் தெரிகிற மாதிரியாகப் பிறப் ரிடம்—அவர் அங்கிலம் கற்றிருந்தபோதிலும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாதென்பதும் இக்கழக அறிக்கையிலிருந்து தெற்றென விளங்குகிறது.

(தொடரும்.)

---

6. கல்வி :

ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் IV)

இயற்கைப் பாடமும் தோட்டவேலையும்

அ. நோக்கங்களும் முறைகளும்

வயல்களிலும் தோட்டங்களிலும் தரிசு நிலங்களிலும் எளிதில் காணக்கூடிய செடிகளை யும் சாதாரணமாகத் தெரிந்த மிருகங்களையும் பற்றிய பாடமே இந்தத் திட்டத்தில் சேர்த் தமைக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது இரண்டாவது வகுப்புக் குழந்தைகள் உயிருள்ளனவற்றில் தாங்களா கவே அக்கறை கொள்ளும்படியான செடி களோடும் மிருகங்களோடும் நெருங்கிப் பழக வேண்டும். அவர்கள் அவற்றைப்பற்றிப் பெறும் அறிவெல்லாம் அவர்களாகக் கவ னித்துத் தெரிந்ததாக இருக்கவேண்டும். வெளிப் பாடங்களில், மரங்களையும் பறவை களையும் மிருகங்களையும் பற்றித் தெரிவதி லும் அவர்கள் அக்கறை கொள்ளும்படியாகச் செய்யவேண்டும். இந்தப் பருவத்தில் முறை யான பாடங்களுக்கு அத்தனை அவசரமில்லை. மிருகங்களைப் பற்றியும் பறவைகளைப் பற்றி யும் மரங்களைப் பற்றியும் பேசும்பொழுது (talks) அவற்றின் அமைப்பின் நுண்ணிய விபரங்களையும் சேர்த்துச் சொல்லவேண்டிய தில்லை.

குழந்தைகளுக்கு நிறங்களில் ஒரு பிரியம்; ஆகையினால். இயற்கையைப் பார்த்தோ ஞாபகத்திலிருந்தோ பழங்கள் அல்லது பெரிய விதைகள் போன்ற அவர்கள் கவனத்திற்கு வரும் சாதாரணமான பொருள்களை நிறச் சுண்ணாங் கொண்டு (coloured chalks) வரையச் சொல்லவேண்டும். அவர்கள் வரை யும் படம் ஒழுங்கீனமாயிருந்தாலுங் குற்ற மில்லை. அவை அவர்களுடைய கவன சக்தி யை வளர்ப்பதற்குப் பேருதவியாக இருக்குமா தலால், அவற்றில் அவர்களை உற்சாகப் படுத்தி வரவும் வேண்டும். அவர்கள் வரையும் படங்களின் பொருள் விளங்கும்படியாகச் சீட்டுகள் எழுதி ஒட்டவும் சொல்லலாம். இரண்டாவது வகுப்புக் குழந்தைகளுக்குத் தாங்கள் கவனிப்பதை வாக்கியங்களாகச் சொல்லவும் தெரியவேண்டும்.

மூன்று முதல் ஐந்து வகுப்புக்களில் பற வைகள் இலைகள் பூக்கள் கீரைபோன்ற மெல் லிய தாட்பூண்டுகள் இவற்றைப் பற்றி விரி வாகவும் சொல்லிவைக்கப்படவேண்டும். கிராமாந்தரங்களில் இப்படியாகத் தெரிந்துள்ள அறிவை விவசாயம் தோட்டச்சாகுபடி இவற் றின் சாதாரணப் பக்குவங்களுக்கு உபயோகிக் கச்செய்யலாம். ஐந்தாவது வகுப்பு மாணவர் களுக்குத் தாங்கள் கவனித்தவற்றைச் சரியாக விவரிக்கவும் குறிப்பானவற்றைப் பற்றி விளக் கப் படம் வரையவும் தெரிய வேண்டும்.

செடிகள் மிருகவாழ்க்கை இவற்றின் பலவேறு பருவத் தோற்றத்தை விளக்கும்

விவரணப் படங்களாலான குறிப்பேடுகளைச் சேர்த்துவைப்பதையும் (collective forms of records by means, of charts) உற்சாகப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அதததற்குச் சொந்தமான சிறு பல பொருட்களஞ்சியமேனும் அமைத்திருக்க வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் அதில் சேர்த்து வருகிற மாதிரிகள் அந்த வருடப் பருவங்களை ஏற்றபெற்றியாகக் குறிப்பன (Valuable records) வுமிருக்கவேண்டும்.

தோட்டம் எல்லாப் பள்ளிகளுக்கும் அவசியம் வேண்டியதெனக் கருதப்படுகிறது. "தோட்ட வேலையின் மூலமாக முன்யோசனையிலும் பொறுமையிலும் வாழ்க்கையின் தத்துவமும் கோட்பாடும் கலந்த திட நம்பிக்கையிலும் (confident expectation which is a form of faith and philosophy of life). பழக்கப்படுகின்றனர். (மாண்டசோரி) கொஞ்சங் கூட இடங்கிடையாத பொழுதும் சட்டிகளிலேனும் சாதிக்காய்ப் பெட்டிகளிலேனும் செடிகளை வளர்த்து வரக்கூடும். அப்படியாவது செய்துவரப்படு மென்ற உறுதியை வைத்தே பள்ளிவேலைகளில் தோட்டவேலையை ஒரு முக்கியமான இனமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

விவசாய இலாகா வெளியிட்டிருக்கும் பள்ளித் தோட்டமென்ற 19ம் நெம்பர் துண்டுப் பத்திரிகையில் அனேக குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆசிரியர்கள் தங்களுடைய வேலைக்குப் பயன்படக்கூடியதாயும் காண்பார்கள். தோட்ட வேலைக்குத் தயார் செய்வதில் ஆசிரியர்களுக்குதவவும் பொதுவாகப் பள்ளிகளைச் சேர்ந்த தோட்டங்களை மேற்பார்த்து வரவும் விவசாயப் புது முறைகளைச் செய்துகாட்டுபவர்களுக்கு (Agricultural Demonstrators) கற்பனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஆசிரியரெவரும் தமக்கு இப்படியாகக் கிடைக்கக்கூடிய உதவியையும் யோசனையையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தோட்டத்தில் செய்கிற ஒவ்வொரு வேலையும் முன்னதாகவே தயார் செய்திருக்கும் ஒரு திட்டமான யோசனையின்படி செய்து வரப்படவேண்டும். ஒவ்வொரு நாளும் செய்யப்படும் திட்டமான வேலையையும் குறித்து வரவேண்டும். நான்காவது ஐந்தாவது வகுப்பு மாணவர்கள் தோட்டத்தின் படம் வரைந்து அதில் ஒவ்வொரு பாத்தியையும் வரையிட்டு அவற்றில் வளர்ந்து வருகிற செடிகளையும் அவற்றிற்கு இட்டுவரும் உரத்தைப் பற்றியும் இவை போன்ற மற்றும் விபரங்களையும் குறித்து வரவேண்டும். வரை படங்களும் சுருக்கமான குறிப்புக்களும் அடங்கிய தோட்டத் தினசரி (The garden diary) அவர்களுடைய வேலையின் விபரங்களை எடுத்தவுடன் பார்த்துக்கொள்ளக் கூடியதாக வகுப்பறையில் தொங்கப்போட்டிருக்க வேண்டும்.

படிப்பிற்காக எடுத்துக்கொள்ளக் கூடியன, முக்கியமாக அந்தந்த இடத்தைப் பொறுத்ததாக இருக்கவேண்டும்; ஆகையால், மேலே சொல்லிய திட்டம் ஆசிரியர்களுக்கு இன்ன போக்கிலிருக்கிறதென்ற குறிப்பேயாகும். அவர்கள் தாங்களாகவே அந்தப் பாடத்தின் நுண்ணிய விபரங்களையெல்லாம் யோசித்துப் பார்த்துத் தெளிவுபடுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னூக்க முயற்சியை (The project method) வெகு அழுத்தமாகச் சிபார்சு செய்யப் படுகிறது. பள்ளிக்கூடத்தில் தோட்டம் போடும் யோசனையையும், தோட்டவேலையையும் மாணவர்களின் குறியாகச் செய்து கொள்ளலாம். கணிதமும் இயற்கைப் பாடமும் பூகோளமும் மொழிப்பாடமும் இவை போன்ற பாடங்களும் இந்த முயற்சி சம்மந்தமாக விரிக்கக் கூடுமென்றால் அது குழந்தைகளுக்குத் தாங்கள் படிப்பதின் நோக்கத்தைக் காண்பதற்கும் உதவும்.

ஆ. அனுபவ வேலை

பாடத்திட்டத்தில் அனுபவ வேலையின் போக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலே சொல்லியபடி பயிற்சிகளின் நுண்ணிய விபரங்களை ஆசிரியரே யோசனை செய்து வைத்துக் கொள்ள வேண்டும். பெரிய பட்டினங்களிலிருப்பது போல வெளியே போய்க் கவனிக்கும் வேலை செய்யக் கூடிய பரப்புச் சுருக்கமாயிருக்கும் பொழுது, வேறு முயற்சிகளுக்கும் சிறு பயணங்களுக்கும் ஏற்பாடு செய்தாகவேண்டும்; உதாரணமாகப் பருவகாலப் பயிர்களைக் கவனிப்பதற்காக வெளிப்பயணம் வருடத்தில் இரண்டொரு தடவைக்கு மேல் சாத்தியப்படக் கூடியதில்லை. அதற்கு மாற்றாகப் பட்டினக் கரைகளிலுள்ள சிங்கார வனங்களிலிருக்கும் செடிகளையும் பூக்களையும் கவனிக்க ஏற்பாடு செய்யலாம். தோட்டவேலை, சிறுபாத்திகளில் சட்டிகளில் அல்லது சன்னல் பக்கம் வைக்கிற பெட்டிகளில்தான் செய்து கொள்ளக் கூடியதாயிருக்கும்பொழுது, இந்தக் குறைவைச் செல்வப் பிராணிகளை (Pets) வளர்ப்பதால் பூர்த்தி செய்து கொள்ளலாம். காய் கறிப் பழத் தோட்டங்களைப் பார்க்கப் போதிய சந்தர்ப்பமில்லாத குறையை அவற்றின் விளைவைச் சந்தைக்குப் போய்ப் பார்ப்பதாலும் மற்றும் பருவகால விளைவை முடிவில் விளையுமிடத்தில் பார்ப்பதற்குப் பதிலாகச் சந்தைக்கு விற்பனைக்கு வரும் பொழுது பார்ப்பதாலும் ஒருவாறாகச் சரிக்கட்டிக் கொள்ளலாம்.

இ. துணைகளும் கருவிகளும்

இந்தப் பாடம் தூலப் பொருள்கள் பற்றிய அனுபவப்பாடமாக இருப்பதால், இதனைச் சொல்லி வைப்பதற்கான துணைத்தேவைகள் வெகு குறைவாகவேயிருக்கும். செய்து வரும் வேலைக் குறிப்பேடுகளை (records) விளக்கியும் பிரித்தும் சேர்த்து வைக்கும் தொகுதிகளும் தினசரிகளும் இயற்கை விளக்கங்களும் பின்னும் படிப்பதற்காகத் தயாரித்துக் கொள்ளவேண்டியனவற்றிலடங்கும். உலகத்திலும் நாட்டின் மற்ற பாகங்களிலுமிருந்து வரும் நிலைமைகளுக்குப் பொருந்தியதாகவே, படங்களிலிருந்தும் மற்றும் பார்வைப் பொருள்களிலிருந்தும் சாதாரணமாகக் கோட்பாடுகள் சம்பந்தமாகக் கற்கக் கூடியனவெல்லாம் அமையக்கூடும். செய்து முடிக்கும் வேலையைத் தொடர்ந்து முறையாகப் படித்து வருவதற்கு மேலே கண்டவை போதியனவாக இருக்க வேண்டும்.

பாடத் திட்டத்தின் முடிவில் குறைந்த அளவாகவேனும் வேண்டிய கருவிகள் உபகரணங்களின் பட்டியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

---

7. அ. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

உறக்கமும் சுகவாழ்வும்

(சுருக்கம்) **UDIAN**

வேலை, ஓய்வு (Rest) உணவு, உயிர்ப்பு (Recreation) நம் சுக வாழ்வாகிய கட்டிலுக்குரிய நான்கு கால்களாகும். இவற்றிலெதாமொரு காலை நீட்டினாலும் குறுக்கினாலும் நாம் சுகமாக வாழ முடியாது. நாம் சோம்பியிருந்தாலும் (lazy) வேலையில்லாதிருந்தாலும் (unemployed) அதிக வேலை செய்தாலும் அளவுக்கு மிஞ்சிய பொழுதுபோக்கி (Recreation) னாலும் உணவைச் சுருக்கினாலும் அதிகமாகஉட்கொண்டாலும் நம்சுகமும் கலக்கமடையும். எப்படிச் சுகவீனத்திற்கு ஒரே காரணமாக இருக்கக் கூடியதில்லையோ, அது போலவே அதனைத் தீர்ப்பதற்கும் ஒரே ஒரு வழிதானுண்டென்று சொல்லமுடியாது.

சரியாக வாழ்வதற்குக் கட்டுப்பாடு (Discipline) வேண்டும். கட்டுப்பாடாக வாழ்வதே சுகமாக வாழ்வதாக முடியும்.

நம் சுக வாழ்விற்கு இன்றியமையாதவற்றில் உறக்கம் முக்கியமானதாகும். அது நம் களைப்பையும் அசதியையும் நீக்கி நமக்குப் புத்துயிருந்தரும்; ஆனால், எல்லாரும் அதன் முழுப் பயனையும் அடைவதில்லை. நாம் உடம்பு சௌகரியமில்லாமல் வைத்தியரிடம் போகும் பொழுது, நம்முறக்கத்தைப் பற்றியும் முக்கியமாக விசாரிக்கப் படுகிறோம். நல்ல உறக்கம் நல்ல சுகத்திற்கு அவசியம் வேண்டும். அது பகலெல்லாம் செய்த வேலையால் நேர்ந்த களைப்பைமட்டுமல்ல; நம் இழையங்க (tissues) ளின் சோர்வையும் மனத் தளர்ச்சியையும் ஆற்றிவிடும்.

வயது வந்தவனொவ்வொருவனும் இரவில் 7மணிநேரம் அயர்ந்து உறங்கவேண்டும். உறக்கக் குறைவு போலவே, அதிக உறக்கமும் விரும்பத் தக்கதல்ல. அதிக உறக்கமே மந்தப் புத்திக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. கடிகாரம் ஆர்ப்பரித்தால் தான் நாம் விழிக்கக் கூடுமென்றால், நாம் அதிகமாக உறங்குகிறோமென்றே அருத்தமாகும். கடிகாரம் எழுப்பாமலே நாம் எழுந்திருக்கிறோமென்றால் நாம் போதிய அளவு உறங்கிவிட்டோமென்று சொல்லலாம். நாம் எழுந்ததும் சுறுசுறுப்பாய் வேலை செய்யக்கூடிய நிலைமையிலிருந்தாலும் நமக்கு உறக்கம் போதிய அளவு இருந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். அயர்ந்துறங்குகிறவர்களையெல்லாம் அதிகமாக உறங்குகிறார்களென்று சொல்லிவிடமுடியாது. அனேகர் தங்களுக்குச் சரியாக உறக்கம் வருவதில்லையென்பதைக்கூட அறிவதில்லை.

நாம் படுக்கையில் படுத்தவுடனேயே உறங்குகிறோமா? அல்லது உறக்கம் வராமல் உருண்டும் புரண்டும் விழித்துக் கொண்டிருக்கிறோமா? அதாவது உறக்கத்தால் நாம் பெற வேண்டிய உதவியனைத்தையும் பெற்று வருகிறோமா? அல்லது குறைந்த உறக்கத்தோடு அவதிப் படுகிறோமா? என்பதை நாம் கவனிக்க வேண்டும். நமக்குச் சரியாக உறக்கம் வரவில்லையென்றால், அயர்ந்த உறக்கம் வரவில்லையென்றால், சுருக்கமாகவே உறக்கம் வருகிறதென்றால் நம்முறக்கம் கலவரைப்பட்டதாகவே யிருக்கிறதென்றால், நாம் அதனைப்பற்றிச் சீக்கிரமாகவே கவனிக்க வேண்டும். குறைந்த உறக்கத்தால் முன் கோபம் வரும், வளரும்; முன் கோபம் அமைதியின்மையில் கொண்டுபோய்ச் சேர்க்கும்; அமைதியின்மை நம் சாந்தத்தையே போக்கிவிடும். அதனால், நமக்கு இரவில் உறக்கம் வருவதற்கே நாளுக்கு நாள் அதிக சிரமமேற்படும். உறக்கமில்லாத அமைதியில்லாத இரவுகள் நம்முடம்பிற்கும் மனதிற்கும் வர இருக்கும் பெரும் தீங்கிற்கு முற்குறிகளாகும். அவை உறக்கம் வராமைப் பிணிக்கே (insominia) நம்மைக் கொண்டுபோய் விட்டுவிடும்.

நல்ல உறக்கம் வரவேண்டுமென்றால், நம் முடம்பு இளைப்பாறுவதற்கேற்ற மெத்தையும் தலையணைகளும் வேண்டும். உறைகளும் விரிப்புக்களும் சுத்தமாகவும் நன்றாகக் காற்றுடியனவாகவும் மெதுவாகவுமிருக்கவேண்டும். படுக்கப் போகும் பொழுது பகல் விசாரங்களும் சங்கடங்களும் நம் மனதை உறுத்திக்கொண்டிருக்கக் கூடாது. படுக்கப் போகுமுன், நம் முகத்தையும் பாதங்களையும் தண்ணீரால் சரிவரக் கழுவுவதும் உறக்கத்தைத் தூண்டுவதற்குதவும். நம் சுகத்திற்குப் பாதகமேற்படாதென்றால், படுக்கப் போகுமுன் தண்ணீரில் குளித்துக் கொள்ளுவதே நல்லது. படுக்கும் அறையில் உபயோகமற்ற சாமான்கள் நிறைந்திருக்கக் கூடாது. தலைக்கு மட்டும் குளிர்ந்த காற்றுப்படும் படியாக மற்றப் பாகத்தை யெல்லாம் போர்வையால் மூடியிருந்தால் உறக்கம் விரைவாகவும் வரும். வெறும் வயிறும் பசி வேதனையும் நம்மைச் சரியாக உறங்கவிடா. உறங்கப் போகுமுன் இலேசான உணவுண்பதால், உறக்கம் வரலாம். (இரவில் உறங்கப் போகுமுன் பால் குடிப்பதாலும் மற்றும் இலேசான உண

வுண்பதாலும் பிறவிடங்களுடன் மூளையிலிருக்கும் குருதியோட்டமுங் குறையவே உறக்கம் விரைவில் வரக்கூடுமாயினும் அவற்றைச் செரிப்பிப்பதற்காகச் செரிப்புக் கரணங்கள் வேலை செய்து கொண்டிருக்குமாதலால், அவ்வளவிற்கு அவை உறக்கத்தின்பயனை அடைய முடியாது போகும். ப—ர்.) இலேசாகச் செரிக்கக் கூடிய உணவாக இருந்தால், கலக்கமில்லாத உறக்கம் வரும். உறங்கும் அறையை அலங்காரஞ் செய்வதென்றால், நீலம் பச்சை நிறங்களால் அலங்காரம் செய்வது நல்லது. சிவப்பும் மஞ்சளும் கிளர்ச்சி நிறங்களாதலால், அவை உறக்கம் வராத படிக்கும் தடுக்கும்.

நோயாளிகளின் பிணிகளில் அனேகம் அயர்ந்த தூக்கத்தால், நீங்கி விடுகின்றன. அனேக ஆபத்தான பிணிகள் கூட, நன்றாக உறங்கி யெழுந்திருக்கவும் குணமாக ஆரம்பித்து விடுகின்றன.

(மூளைக்குப் போய்வரும் குருதியோட்டம் குறைந்தால்தான் உறக்கம் வரக்கூடுமாதலால், படுத்த பின்னும் எதனையேனும் நினைத்துக்கொண்டிருந்தால் உறக்கம் வராமல் தடைபடவே செய்யும். தெற்கே தலையும் வடக்கே காலுமாகவும் வலதுகை கீழாக ஒருச்சாய்த்தும் படுத்துறங்குவது நல்லதென்று சிலர் சொல்லுவர். எவரும் ஒரேபடியாகப் படுத்திருக்க முடியாதென்றும் உறக்கத்திலேயே நாம் பலதடவை உடம்பைப் புரட்டக்கூடுமென்றும் அது நம் சுகத்திற்கவசிய மென்றும் சொல்லப்படுகிறது. தலைக்குத் தலையணை வைத்துக் கொள்ளுவதைக் காட்டிலும், கட்டிலின் கால் பக்கத்திலும் தலைப் பக்கம் மூன்றங்குல உயரம் உயர்ந்திருக்கும்படியாகச் செய்து கொள்ளுவது நல்லது. ப-ர்.)

Social welfare.

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதார வாழ்க்கைக் குறிப்புக்கள்

1. உருளைக் கிழங்கு உணவிற்கு மிகவும் உசிதமானது. அது மலபந்தத்தை நீக்கும். மூத்திரத்தை அதிகரிக்கப் பண்ணும். பாலைச் சுரப்பிக்கும். நரம்புகளுக்குச் சிற்றுயர்வை உண்டாக்கி, மேக வியாதியாளருக்கு உற்சாகத்தை உண்டு பண்ணும்.

குணபாடம். வைத்தியஇரத்தினம் முருகேசமுதலியார்.

2. உருளைக் கிழங்கில் 74.7 சதமானம் ஈரிப்பும் 1·6 சதமானம் பிசிதமும் ·1 சதமானம் கொழுப்பும் ·6 சதமானம் கனியங்களும் 22·9 சதமானம் கரிநீரகைப் பொருள்களுமிருக்கின்றன. கனியங்களில் ·01 சதமானம் (calcium) சுதையமும் ·03 சதமானம் (phosphorus) எரியமும் ·7 சதமானம் கீழாயிரச் சிரெடை இரும்பு மிருக்கின்றன. 100 சிரெடையில் 99 கனலியும் 40 மூல அலகு ஏ உயிர்ச் சத்தும் 20 மூல அலகு பி, உயிர்ச் சத்தும் 17 கீழாயிரச் சிரெடை சி உயிர்ச் சத்தும் பி 2 உயிர்ச் சத்துச் சுமாராகவு மிருக்கின்றன.

Health Bulletin. No 23.

3. உருளைக்கிழங்கில் இரும்புச் சுதையம் (Calcium) எரியம் (Phosphorus) சாம்பரம் (Potassium) அதிகமாக இருக்கின்றன. அதில் நிலவியம் (Magnesium) உவரம் (Sodium) கந்தகம் பாசிகம் (chlorine) மங்கனம் (Manganese) சிலிக்கம் (Silicon) ஊதியம் (Iodine) செம்பு முதலிய பல கனியங்கள் இருப்பதாகவும் கண்டிருக்கின்றனர். இவையெல்லாம் நம்முடம்பின் பாதுகாப்பிற்குப் பயன் படுவதால் உருளைக் கிழங்கின் உணவுச் சிறப்புத் தெற்றென விளங்கும். (மங்கன

மும் செம்பும் பிற உணவுப் பொருள்களேயும் குருதியோடு சேர்க்கு மென்பர். ப-ர்.)

உருளேக் கிழங்கில் கொழுப்பில் கரையும் உயிர்ச் சத்துக்க ளில்லேயென்ருலும், நீரில் கரையும் உயிர்ச் சத்துக்கள் நிரம்ப இருக்கின் றன. பிந்தியவற்றில், சி உயிர்ச்சத்து மிகவும் முக்கியமானது; ஆனல், உருளேக் கிழங்கி லுள்ள சி உயிர்ச்சத்து அதனைச் சமைக்கும் பொழுது அனேகமாகக் குறைந்து போகிறது. (இட்டலியை வேக வைப்பது போல் ப-ர்.) நீராவியால் வேக வைத்தால் சி உயிர்ச்சத்துக் கழியவும் செய்யாது. மெதுவாகச் சமைப்ப தாலும் நெடு நேரம் சூடாக வைத்திருப்பதா லும் சி உயிர்ச் சத்து அனேகமாக அழிந்து போகும். நீராவியால் வேகவைப்பதால், அதி லுள்ள கனியங்களும் அழிவதில்லே. தோலே உரியாமல் வேக வைப்பதைக் காட்டிலும் தோலே உரித்து வேக வைப்பதால் சேதம் அதிகமே யாகிறது. உருளேக் கிழங்கையும் தவிடு நீக்காத கோதுமை உரொட்டியையும் அவற்றிலுள்ள நீரைப் போக்கி நிறுத்துப் பார்த்தால், அவற்றிலுள்ள பி உயிர்ச் சத்து ஒன்றுபோலாகவே இருக்கும்.

Health Stanley Lief.

(இரண்டாம் மலர் 78 ம் பக்கத்தில் உருளேக் கிழங்கைப் பற்றி யெழுதி யிருப்பதையும் பார்க்க ப-ர்.)

4. இரசாயன முறையில் முற்றும் வேறுபாடான மூலங்களேக் கொண்ட பதார்த் தங்களேயாவது, செரிப்பதற்கு வேறு வேறான காலங்கள் செல்லும் பதார்த்தங்களேயாவது ஒரே வேளேயில் உபயோகிக்கக் கூடாது. இவ் வாருக, (1) பாலேயும் புளிப்புப் பழங்களேயும்; (2) புளிப்புப் பழங்களேயும் உருளேக் கிழங்கு முதலிய காய்கறிகளேயும்; (3) பாலேயும் காய் கறிகளேயும் ஒரே வேளேயில் சாப்பிடக் கூடாது. (1) தானியங்களேயும் பாலேயும்; (2) தானியங்களேயும் கொட்டைகளேயும்; (3) கொழுப்பையும் தானியம் அல்லது காய்கறிக ளேயும்; (4) பாலேயும் முட்டையையும் ஒரே வேளேயில் சாப்பிடலாம்.

தானியங்களி லுள்ள பிசிதமானது வேர்க் கடலே, மொச்சை முதலியவற்றிலுள்ள பிசிதத்தையும், ஓட்ஸ் (oats) தானியத்தில் அடங்கிய பிசிதம் கோதுமைப் பிசிதத்தையும் விடச் சிறந்தது; ஆனல் எல்லாவற்றிலும் உயர்ந்த தரம் பாலிலுள்ள (protein) பிசித மாகும்.

ஒவ்வொருவருடைய உணவுக் கிரமத்தி லும் அவசியம் முட்டையினுடைய மஞ்சட் கருவும் வெண்ணெய்யும் பச்சைக் கீரை வகை களும் சேர வேண்டும்.

நல்வழி.

5. மாடுகளேத் திட்டுவதும் அடிப்பதும் மிதிப்பதும் கெட்ட பழக்கம். அவற்றிற்குப் புத்தியில்லாமலில்லே. அவற்றுள் சிலவே சோம்பேறியாயிருக்கும். அடிப்பதால் சத்தம் போடுவதால் பதறிப் போகும்; பசுவின் பாலும் குறைந்து போகிறது. கல்லால் கம்பால் அடிக் கப்படும் காளே மாடும் சீக்கிரம் களேத்துப் போகிறது. அன்பாக நடத்தப்படும் மாடு, எசமானனின் குறிப்பறிந்தும் வேலே செய்கி றது; அதிக நேரமும் வேலே செய்கிறது.

I. M. Moomaw.

6. வாழைப்பழக் களி:—முற்றிய பழங் களின் தோலே நீக்கி, பின் அப்பழங்களேத் துண்டு துண்டாக்கி ஒவ்வொரு இராத்தல் பழத்திற்கும் ஒவ்வொரு இராத்தல் தண்ணீர் சேர்த்து அவற்றைக் கலிக்கோத் துணி கொண்டு வடிகட்டக்கூடியதாகக் கரைந்து மெதுவாகும்வரை சுமார் ஒரு மணி நேரத் திற்குக் கொதிக்க வைக்க வேண்டும். அப் படி வடிகட்டிய பிறகு ஒவ்வொரு இராத்தல் பழத்திற்கும் ஒரு இராத்தல் சருக்கரையும் அதனேடு போதிய நரந்தக்காடி (citric acid) அல்லது மண்டிகக்காடி (tartaric acid) அல்லது எலுமிச்சம் பழச் சாறு நல்ல உருசி தரும்படியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நரந்தக் காடியையேனும் மண்டிகக் காடியையேனும் சேர்ப்பதற்காக இருந்தால், அப்படிச் சேர்ப்பதற்கு முன் அதனைத் தண்ணீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். சருக்கரையும் காடி அல்லது சாறும் சேர்த்த பின்னும் ஒரு மணி நேரத்திற்குக் குறையாமல் அதனைக் கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின், வாயகன்ற கண்ணாடிப் புட்டி அல்லது சாடிக்குள் கந்தகத் திரியை எரிய விட்டு அதில் இந்தக் கனியைச் சூடாயிருக்கும் பொழுதே போட்டு விடவேண்டும். அதன் மேல் சூடாறியதும், கனத்த கடுதாசி (Parchment) போட்டு மூடி அதற்கு மேல் தக்கை (cork) யாலேனும் மற்ற மூடி (Stopper) கொண்டேனும் மூடிவிட வேண்டும்.

Industry.

---

8. கிராமவாசிகள் : விபசாயிகள்

பயிரிடுபவரின் வறுமை

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் VI)

கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் தான் பயிரிடுபவன் வறுமைக்குக் காரணமா?

பொதுவாக நம் நாட்டில் வட்டி அதிகமென்றும் சமுசாரிகள் எவ்வளவு தான் சம்பாத்தியம்செய்தபோதிலும் அதுவட்டிக்கே சரியாய்ப் போய்விடுகிறதென்றும் ஆகையால் சமுசாரியின் கடன் பளுத்தான் அவனுடைய வறுமைக்குமுக்கிய காரணமென்றும்சொல்லப் படுகிறது. 'கடன் வாங்கிச் செய்கிற தொழில் எதுவாயிருந்தாலும் எவ்வாறிருந்தாலும்-அதுவும் கடுமையான வட்டி கொடுக்க வேண்டியிருக்கும்பொழுது, விருத்தியாகக்கூடியதில்லை. இப்படியாக, சமுசாரிகள் தங்களுடைய சொந்த நிலங்களையும் இழந்து போகிறார்கள். அவை, கொடுக்கல் வாங்கல்காரர்களின் கைக்கும் போய்ச் சேர்ந்து விடுகின்றன! என்பதே அவர்களுடைய கட்சி.

உயர்ந்த வட்டி ஒன்றே வறுமைக்குக்காரணமாக மாட்டாது.

சமுசாரிகள் கடன் பளுவையும் வட்டி அதிகமென்பதையும் நாமும், ஒப்புக்கொள்ளுகிறோம்; ஆனால், அதிலிருந்து கடன் பளுத்தான் வறுமைக்குக் காரணமென்றாகிவிட மாட்டாது. நம்நாட்டுப் பாங்குவட்டியைப் பிறநாட்டுப்பாங் வட்டியோடுஒப்பிட்டுப் பார்த்தால்,எந்தக்காலத்திலுமே நம் நாட்டு வட்டி சௌகரியமாயிருந்ததில்லை. சாதாரணமாக, மற்ற நாடுகளில் 3 சதமானம் வட்டியாக இருக்கும் பொழுது, நம் நாட்டில் 6 சதமான வட்டியாக இருந்து வருகிறது. முந்திய சண்டைக் காலத்தில்— நிரம்பச் செழிப்பானகாலத்திலும், 5சதமானவட்டிக்குக் குறையவில்லை. சண்டை முடிவில் ஜெர்மனியில் 30சதமான வட்டியாக இருந்ததும், சில வருடங்களுக்குள் $2\frac{1}{2}$ சதமான வட்டியாகக் குறைந்து விட்டது. சீமையில் தங்கத் திட்டத்தை (Gold Standard) நிறுத்திய பொழுது 6 சதமான வட்டியாக இருந்தது. ஒன்பது மாதத்தில் 2 சதமான வட்டியாகக் குறைந்து விட்டது. அதற்கு முன் 35 வருடங்களுக்குள்ளாக அதுதான் குறைந்த வட்டி. இந்த ஒன்பது மாதத்தில் சீமையில் பணம் செழித்துப் போய் விட்டதென்பதில்லை. குறைந்த வட்டிக்குப்பணம் கிடைக்குமென்றால் தான் பல தொழில்களும் விருத்தியாக நடக்குமென்னும் யோசனையின் பேரில், அப்படி வட்டியைக் குறைக்கும் படியான ஏற்பாட்டை அரசாங்கம் செய்து முடித்தது. நம் நாட்டிலோ வட்டியைக்குறைக்க அரசாங்கம்உதவுவதில்லை. பாங்கு வட்டியே 6 வட்டியாக இருக்கும்

பொழுது ஏழை விபசாயி அதிக வட்டி கொடுக்காமல் எப்படிக் கடன் பெற முடியும்? வறுமையின் காரணமாகவே வட்டி உயர்கிறது. அப்படியிருக்க உயர்ந்த வட்டியால் வறுமை ஏற்படுகிறதென்று சொல்லுவதற்கில்லை.

தூற்றப்படுகிற கொடுக்கல் வாங்கல்காரனில்லாமல் தீராது.

வட்டிதாரணை பணத்தேவையையிருப்பை மட்டும் பொறுத்ததல்ல; திரும்ப வசூலாகக் கூடிய தன்மையையும் பொறுத்ததாகும். இப்பொழுதும் போதிய வரவுள்ள விபசாயி 9 சதமான வட்டிக்கும் சாதாரணமாகக் கடன்வாங்க முடிகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவு பலவகையிலுமிருந்து வருகிறது. அப்படி யிருந்தும் ஐக்கிய மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் விபசாயிகளும் 15 சதமான வட்டிக்குக் குறைந்து கடன் வாங்கக் கூடியதாயில்லை. அப்படி யிருக்க, கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் மட்டும் குறைந்த வட்டிக்கு எப்படிக்கடன் கொடுத்து வருவார்கள்? விதையும் கடன்; உப்பும் கடன்; கூலியும் கடன்; வால்தோலும் கடன்; மாடும் கடனாக வாங்கியது; வேளாண்மையும் மழையைப் பொறுத்தது; மழையும் நிச்சயமில்லாதது; இப்படி இருக்கும் சமுசாரிக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பாரும் இருக்க முடியுமா? எல்லாம் தன் தன் காரியமென்றிருக்கும் இவ் வுலகத்தில், கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களை மட்டும் தருமத்தை யனுசரித்துப் போக வேண்டுமென்று நாம் எவ்வளவு தூரம் எதிர்பார்க்க முடியும்? மழை பெய்த பிறகு ஏரைத்தேடி மாட்டைத் தேடி விதையைத் தேடிக்கடன்வாங்கப்போகிறவன் எப்படியாவது கடன் கிடைத்தால் சரி என்று நினைக்க முடியுமேயன்றி, சௌக்கியமாகவே கடன் வாங்கி விட வேண்டுமென்று அவன் தான் நினைக்க முடியுமா? அவனே நினைத்தாலும், அவசரத்திற்கு அந்தப்படி,கடன்பிரியுமா? ஈரம் உலர்ந்து போன பிறகு அவனுக்குக் கடன் கிடைத்துத் தான் ஆவதென்ன?

அரசாங்க உத்தியோகங்களில் நல்ல சம்பளம் மாதாமாதம் வாங்கி வருகிறவர்களை நாம் பார்க்கிறோம். சம்பளம்வாங்கியஇரண்டுமூன்று நாட்களிலிருந்து திரும்பவும் கடன்தான்வாங்கி வருகிறார்கள். சமுசாரிக்கு விளைவதும் நிச்சயமில்லை; விளைந்தாலும்வருடத்தில் இரண்டொரு தடவைதான் விளையமுடியும்; அப்படி மொத்தமாக வருவதை வைத்திருந்து வருடம் பூராவும் செட்டாகச் செலவு செய்து வருவதெப்படிச் சாத்தியமாகும்? படித்திருப்பதுமில்லை; கணக்கெழுதவும் தெரியாது; (காய்ந்த மாடு கம்பில் விழுந்தாற்போல். ப-ர்.) கையில் பணம் கொஞ்சம் தாராளமாய் இருக்கும்பொழுது, செலவும் கொஞ்சம் தாராளமாகி விடுகிறது; என்றாலும், சமுசாரிகள்செட்டான பழக்கத்திலேயேஇம் மட்டாவது நீந்தி வருகிறார்களென்று சொல்ல வேண்டும். அவர்களால் கட்டுப்படுத்த முடியாத பலகாரணங்கள் அவர்களைக் கடன் வாங்கியே தீரும்படியாகச் செய்து விடுகின்றன. இப்படியாகக் கடன் ஓர் அவசியத் தீங்காகிறது; அதனால், கொஞ்சம் வறுமை வளரத்தான் செய்கிறது; இருந்தாலும், அதனை வறுமைக்குக் காரணமாகச் சொல்ல முடியாது.

பணக்கார அமெரிக்காவிலும் 53 சதமான வட்டி வரைக்குங் கூட இருந்து வந்தது. பாங்கு வட்டி 3 சதமானமாக இருக்கும் சீமையிலும் 40 சதமான வட்டி வரை கச்சேரிகளில் தீர்ப்பாகிக் கொண்டிருந்தது. எளியவன் எந் நாட்டிலிருந்தாலும் தன் எளிமைக்காகத் தெண்டம் கொடுக்க வேண்டியவனாகவேயிருக்கிறான். தன்னலம் நிறைந்ததாக எடுத்ததற்கெல்லாம் பணமே குறியாக இருக்கிற இந்தக் காலத்திலே ஒவ்வொருவரும் தத்தம் இலாபத்திற்காகப் பிறர் தலையைத் தடவுவதும் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது.

கொடுக்கல் வாங்கல்காரர்களைத் தூற்றுகிறவர்கள் மற்ற நாடுகளில் வட்டியில்லாமலும் குறைந்த வட்டிக்கும் அரசாங்கமே விபசாயிகளுக்குக் கடன் கொடுத்து வருவதையும் அறிய வேண்டும். விபசாயக் கடன் சட்டத்

தின்படி வட்டியில்லாமல் 60 வருடங்களில் திருப்பிக் கொடுக்க ஒருகோடியே தொண்ணூறு இலட்ச ரூபா சீமை கடனாகக் கொடுத்திருக்கிறது. நம் நாட்டிலோ பஞ்சகாலத்தில் பட்டினியாகச் சனங்கள் மடிந்து கொண்டிருக்கும்பொழுதும், அரசாங்கம் $7\frac{1}{2}$ சதமான வட்டிக்குக் குறைந்து கடன் கொடுக்கமுடியாதென்று சொல்லுகிறது; அதனை இரண்டு மூன்று வருடங்களிலும் வசூல் செய்துவிடுகிறது.

நாம் இப்படியாகச் சொல்லுவதிலிருந்து கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் செய்கிறதெல்லாம் சரியென்று சொல்லுவதாக எண்ணிவிடக்கூடாது. அவர்கள் பேராசைப்படாதிருக்க வேண்டும்; ஈவு தாவு பார்த்துச் சௌகரியங்களும் செய்ய வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். சமுசாரிகளுக்குச் சௌகரியமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படாது என்பதும் நம் நோக்கமல்ல. குறைந்த வரவேயுள்ள எந்தத் தொழிலும் அதற்கும் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பதாயிருந்தால் மட்டும் இலாபகரமாய் வேலை செய்ய முடியுமென்பதை நாம் அறிவோம். கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் ஞாபகத்திற் கெட்டாத கலமாயிருந்து வருகிறார்கள்; அவர்கள் இன்னும் இருந்து வருவார்கள். அவர்களைத் தூற்றுவதால் பயனில்லை. சமுசாரிகளுக்குச் சௌகரியமான வட்டிக்குக் கடன் கிடைக்காதிருப்பது தான் (அரசாங்கம் அதற்கான ஏற்பாடு செய்யாதிருப்பதுதான். ப-ர்.) அவர்கள் வறுமைக்குக் காரணமேயன்றி, கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் காரணமல்ல.

(முதற் பாகம் முற்றிற்று.)

9. கதை: சரித்திரம்:

வினை விதைத்தவன் வினையை அறுப்பான்

வினை விதைத்தவன் வினையை அறுப்பான்.

ஒரு நொடிப்பொழுதில் ஊர் முழுவதும் ஒருவிதச் சத்தம் உண்டாயிற்று. வேட்டை நாய்கள் பின்தொடர, மனிதர்கள் தங்கள் கைகளில் தடிகளோடு ஓடோடி வந்துகொண்டிருந்தார்கள். மதில்மேல் தன்னுடைய உரோமங்களைத் தடவிக்கொடுத்து அழகு செய்துகொண்டிருந்த பூனையானது இந்தச் சத்தத்தைக் கவனித்து, அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தது. திடீரென ஓர் இருண்ட நிறமுள்ள ஓநாய் ஓடிவந்தது. கிராமத்தார் அதைப் பிடிக்கப் பல பக்கங்களிலிருந்தும் அதி ஆக்கிரோசத்துடன் வந்துகொண்டிருந்தனர்.

ஓநாய் சுவரிலிருந்த பூனையைப் பார்த்து, "ஐயோ, சிநேகிதா! — இந்த ஊரில் இருக்கும் ஒரு பட்சமுள்ள மனிதன் பெயர் சொல்லு; நான் ஓடிப்போய்த் தப்பித்துக்கொள்ளட்டும்.'' என்று கெஞ்சினது.

பூனை:—'சீக்கிரம் இராமன் வீட்டுக்கு ஓடு; அவன் காப்பாற்றுவான்' என்றது.

ஓநாய்:— தன்னை விரட்டும் நாய்களைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே, 'இராமனுடைய ஆட்டை ஒரு நாள் கொன்று தின்றுவிட்டேன். அவன் என்னைப் பகைக்கிறான்' என்றது.

பூனை:— 'வீமன் நல்லவன்; அவனிடம் ஓடி அடைக்கலம் புகுந்துகொள்' என்றது.

ஓநாய்:— 'ஐயோ, அவனுடைய வெள்ளாட்டுக் குட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டேன். என்னை நையப்புடைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்' என்றது.

பூனை:— 'பக்கத்து வீட்டு வசந்தன் நல்லவன்' என்றது.

ஓநாய்:— 'வசந்தன் நிச்சயமாய் என்னைக் கொன்றுவிடுவான். அவன் என்னைத் தேடி அலைவதாகச் சொல்லுகிறார்கள்.' என்றது

பூனை:— 'இதென்ன தர்ம சங்கடம் அப்பா! இராசா உன்னை ஒளித்து வைக்கக் கூடும். சீக்கிரம் கிளம்பு; அதோ வருகிறார்கள்.' என்றது.

ஓநாய்:— 'முடியவே முடியாது. எல்லோரும் என் சத்துருக்கள். நான் எங்குப் போவேன்? எப்படிப் பிழைப்பேன்? ஆ! ஆ!' என்றலறியது.

பூனை:—(ஆச்சரியத்துடன்) 'இதென்ன புதுமை! ஒதுக்கிடம் ஒன்றுமில்லையா? உன் வினையே உன்னைச் சுடுகிறது. நீ வெட்டின குழியிலே நீயே விழுகிறாய். உலகில் நாம் நன்றாயிருக்கும்பொழுது நமக்குச் சிநேகிதர்கள் தேடிக்கொள்ளுவது அவசியம். உனக்கு இன்னல் உண்டாகும் பொழுது உன்னை ஏற்றுக் கொள்ளும்படி நீ மற்றவர்களுக்கு உதவி புரிந்திருக்கவேண்டும். அப்படியின்றி, நீ மற்றவர்களுக்கு இன்னல் புரிந்தே வந்திருக்கிறாய்' என்றது.

ஓநாய்:— "சரி போதும், உன் அதிகப் பிரசங்கம். எனக்கு உதவிசெய்ய உன்னால் முடியாதென்று சொல்லி விடு" என்று சொல்லிக்கொண்டு, தெரு வழியே ஒரே யோட்டம் பிடித்தது.

"ஓநாய் தன்னையே நொந்துகொள்ள வேண்டியதிருக்க, நம்மை நோகிறது. வினை விதைத்தவன் வினையை அறுப்பான்" என்று பூனை சொல்லிக்கொண்டது.

வித்தியாதனம்

---

10. குடிசைத்தொழில்: கைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras

(சாரம் IV)

குடிசைத் தொழில்கள்.

நம் நாட்டார் வெகுவாகக் கிராமங்களில் வசிக்கிறார்களென்பதுண்மை. நம் மாகாணத்திலும் 86·44 சதமானம் கிராமங்களில் வசிக்கின்றனர். ஒரு சிலரே தொழிற்சாலைகளில் வேலை பார்க்கின்றனர். பொருளாதார மந்தமும் விவசாய விளைபொருள்களின் விலைத் தாழ்வும் கிராமாந்தரத்திலிருப்பவர்களை வெகுவாகவும் பாதித்துவிட்டன. அங்கங்கே நடந்துவந்த சிறு தொழில்களும் கெட்டொழிந்து போயின. இப்பொழுது, விவசாய வேலைக்காலம் தவிர்த்து வேறெதேனும் சம்பாத்தியத்திற்கு வழியே யில்லாதும் போய்விட்டது. ஆகையால், கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்யவேண்டியதும் அவற்றின் மூலம் நித்தியத் தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டியதும் அவசியமாக இருக்கின்றன.

சப்பானில் பெரிய ஆலைகள் அதிகமாகக் கிடையாது. அங்கே எங்கே பார்த்தாலும், வீடுகளிலேயே வேலை செய்து வருவதும் ஒரு சிலர் சேர்ந்து சிறு தொழில்களைத் தனியாகச் செய்து வருவதும், சிறு ஆலைகளிலேயே வேலை செய்து வருவதுமாயிருக்கக் காணலாம். அங்கே பெரிய வர்த்தகக் கூட்டங்கள் (combines) இருப்பினும், பொதுவாக எந்தத் தொழிலும் விசேடமாக எந்திரத் தொழிலும் சிறு சிறு கூட்டங்களாகச் சேர்ந்து செய்வதே விருத்தியாகிக் கொண்டு வருகிறது. செய்

பொருள்களில் ஐந்நூறு பேருக்குமேல் வேலை செய்யும் ஆலையில் செய்யப்படும் பொருள்கள் 35 சதமானமேயாகும். அனேகமாகப் பாதிப் பொருள்கள் ஐம்பது பேருக்குக் குறைந்த தொழிற்சாலைகளிலேயே செய்யப்படுகின்றன. சிறு தொழில்களைப் பெரிய தொழில்களோடு இணைத்திருக்கும் மாதிரியினுல்தான் அப்படிச் செய்துவர முடிகிறது. பெரிய தொழில்கள் விருத்தியாவதால் சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் ஒழிந்துபோகும், வேலையில்லாத்திண்டாட்டம் அதிகமாகிவிடுமென்று பயப்படவேண்டியதில்லை. கைவேலைகள் விருத்தியாகிவரும் சப்பானின் அனுபவம் நமக்கும் பிரயோசனப்படக்கூடும். நம் நாட்டிலும் குடிசைத் தொழில்கள் சிறு கைத்தொழில்கள் மத்தியதரக் கைத்தொழில்கள் இவற்றிற்கும் இவற்றின் விருத்திக்கும் போதுமான இடமிருக்கிறது. சிறு தொழில்களால் செய்து முடிக்கப்படும் பொருள்களைப் பெரிய ஆலைகளில் வேலை செய்வதற்கு மூலப் பொருள்களாக வைத்துக்கொள்ளவுங்கூடும். நம் நாடு ஒரு பெரிய விபசாய நாடாக இருக்கும் நிலைமையில், அதற்குத் துணையாகப் பல வேறு தொழில்களும் வேண்டும்.

தொழிற்பள்ளி (Industrial Schools) களில் வேலை படித்து வந்தவர்கள் தாங்களாகச் சிறு தொழில்களைப் புதிதாக ஆரம்பிப்பதற்குமில்லை; ஆகையால், இனித் தொழிற் பள்ளிகளில் தொழிற் கல்வியோடு சிறு தொழில்கள் செய்து காட்டும் (Demonstration Factories) தொழிற்சாலைகளும் சேர்க்கப்பட வேண்டும். அங்கே கற்கிறவர்களுக்குத் தங்கள் வீட்டின் பக்கமாகவே ஆரம்பிக்கக்கூடிய தொழில்களைப் பற்றிய கல்வியே கற்பிக்கப்பட வேண்டும். அப்படிச் சொற்பகாலம் கற்பித்தாலும் போதும்; ஆனல், அதற்குள்ளாக அந்த அறிவைத் தாங்களாகவே பயன் படுத்திக் கொள்ளக்கூடியதாக அதனை அழுத்தமாகக் கற்பித்திட வேண்டும். அப்படிக் கற்பித்து வந்தால், உள்ளூர் வட்டத்தில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு வேலை செய்யவும் முடியும். தேவைகளும் எளிதில் பூர்த்தியாகும். சம்பாத்தியத் திறமையும் வளரும். இந்தக் கருத்தையனுசரித்துத் தோற்சாமான்கள் செய்யவும் உலோக வேலைகள் செய்யவும் வார்க்கவும் சட்டிபானை வனையவும் கயிறு திரித்து வேலை செய்யவும் நம் மாகாணத்திலுள்ள தொழிற் பள்ளிகளில் கற்பிக்கப் பட்டு வருகின்றன. தோற்சாமான்கள் செய்யத் தோல்வியாபாரக் கல்விச் சாலை (Leather Trades Institute) யிலும் சட்டி பானைவனையச் சென்னைக் கலைத் தொழிற் பள்ளி (School of Arts and Crafts) யிலும் வார்க்கவும் உலோகங்களில் வேலை செய்யவும் அரசாங்கப் பல தொழிற் பள்ளி (School of Technology) யிலும் கள்ளிக் கோட்டைக் கைத்தொழிற் பள்ளி (Industrial School) யிலும் கற்பிக்கப் படுகின்றன.

நம் மாகாணத்தில் மின்சார சக்தி சௌக்கியமாகக் கிடைக்கும் பொழுது, சிறு தொழில்கள் விருத்தியாவதற்கும் இடமுண்டு. வீடுகளிலும் சிறு தொழிற் சாலைகளிலும் வேலை செய்து வர முடியும், வேலையும் இடமும் சுத்தமாகவும் இருக்கும்; வேலை திறமையாகவும் நடக்கும்.

தொழிலாளிகளுக்குப் பிற இடங்களில் விற்கிற விலையும் தெரிகிறதில்லை. தங்கள் முன்னேர்கள் செய்து வந்த மாதிரியே தாங்களும் செய்து வருகின்றனர். புதிதாக அந்த மாதிரியை மாற்றுகிறதென்ருலும் மிகுந்த சிரமமேற்படுகிறது; காலத்திற்கேற்ப மாற்ற முடிகிறதில்லை; தரகர்களுக்கும் அயலூர் விலை தெரிகிறதில்லை; ஆகையால், அதிகமாகவும் விற்பதில்லை; நல்ல விலையும் கிடைப்பதில்லை; கிடைக்கிற விலையிலும் போதிய கூலி அவர்கள் கைக்கு வந்து சேருவதில்லை.

கைத்தொழிற் பொருட் களஞ்சியம் (Musium) இருந்தால் அது தொழிலபிவிருத்திக்கு ஆதரவளிக்கக் கூடும். செய் பொருள் மளிகைகளிலும் (Emporium) காட்சிச் சாலைகளிலும் (Show room) அவை வைக்கப்படு

மென்றால், அவற்றின் விற்பனை பின்னும் அதிகமாகலாம். திருந்திய கருவிகளும் உபகரணங்களும் குடிசைத் தொழில்களில் பயன்பட இடமுண்டு; அப்படித் திருத்துவதைப் பற்றியும் கவனித்து வரப்படுகிறது.

(தொடரும்)

---

11. செய்தித் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. வங்காள அரசாங்கம் கையால் காகிதம் செய்வது இலாபம் தரக்கூடிய முயற்சியாயிருக்குமா வென்று கவனிப்பதற்கு மூன்று வருடத்திட்டமொன்று போட்டிருக்கிறது. அதற்கு மூன்று வருடத்திலுங்கூடி 9000ரூபா செலவாகுமென்றும் கருதப்படுகிறது.

Indian Co-operative Review

2. இந்த வருட ஆரம்ப முதல் நம்மிந்திய அரசாங்கம் நிலக்கடலைப் பயிரிடுபவருக்கு உதவுவதற்காகக் ஏற்றுமதிக் கம்பெனிகளிலிருந்து ஒரு வட்டம் (Rebate) வசூல் செய்து வந்தது. நிலக்கடலைச் சாகுபடியை விருத்தி செய்வதற்கும் நிலக்கடலையைச் செலவழிப்பதற்கும் மாகாண அரசாங்கங்களும் தங்கள் வீதம் உதவத் தயாராக இருந்தால், தாங்களும் அந்தப் பணத்திலிருந்து உதவுவதாக மத்திய அரசாங்கம் தீர்மானம் செய்திருக்கிறது.

நிலக்கடலையைத் தரம் பிரித்து விற்பதினாலும் உப்பிட்டும் சூப்பி முதலிய தின்பண்டங்களாகச் செய்தும் சிறு சிறு பொட்டணங்களாக நம் நாட்டின் முக்கிய கைத்தொழிற் பட்டினங்களாகிய இருபது பட்டினங்களிலும் தெருத்தெருவாக விற்பதினாலும் நிலக்கடலை அழிவையும் விலையையும் விருத்திசெய்யக்கூடுமென்று தெரிகிறது. பட்டாளத்தேவைக்காகக் காடி (Acid) செய்வதற்காகவும் நெசவுத் தொழிற்காகவும் கம்பளி சணல் தொழில்களுக்குதவக்கூடிய எண்ணெய்க்காகவும் ஐக்கிய மாகாணத்தில் நிலக்கடலையைச் செலவழிக்கலாமென்று தெரிகிறது. நாளிது வருடம் ஆகஸ்டுமாதத்தில் சிம்லாவிலேனும் தில்லி (Delhi) யிலேனும் நிலக்கடலைப் பயிரிடுபவருக்குச் செய்யவேண்டிய உதவிகளைப் பற்றியும் நிலக்கடலையை அழிப்பதற்கான திட்டத்தைப் பற்றியும் ஒரு மாநாடு கூட்டப்படும். அந்த மாநாட்டில் இந்திய பம்பாய் சென்னை ஐதராபாத்து அரசாங்கப் பிரதிநிதிகளும் மற்றும் அழைக்கப்படும் மாகாணங்களும் கலந்து கொள்ளும்.

Mail.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்

1. காற்றும் மழையும் என்றுமில்லாத சேதத்தை மலையாளத்தில் விளைவித்திருக்கின்றன. சுமார் ஓர் இலட்சம் மக்கள் வீடுவாசமில்லாமலும் உணவு இல்லாமலும் சங்கடப்படுகின்றனர். சர்க்காரின் பண உதவி கிடைத்திருக்கிறது. ஆனால், அங்கே யேற்பட்ட சேதம் அளவுகடந்திருப்பதால், சர்க்கார் உதவி மட்டும் போதாதென்று தெரிகிறது. சர்க்காரும் சனத்தலைவர்களும் கலந்து சங்கட நிவாரண வேலை செய்து கொண்டிருக்கின்றனர். மணல் மூடிக்கிடக்கிற வயல்களைச் செப்பனிடுவதற்குப் பண உதவி தேவை. மலையாளத்திலுள்ள கூட்டுறவாளர்களும் தக்கது செய்வார்களென்று நம்புகிறோம். விளைபொருள் விற்பனைக்காகப் பாலக்காட்டில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவாளர் துவக்கிக் கொடுத்திருக்கிறார்.

கூட்டுறவு

2. நெசவு வேலைகள் செய்து காட்டும் பிரிவில் இரண்டு பேர் நெசவுப் பார்வையாளர்களும் (Inspectors) எட்டுப் பேர் செய்து

காட்டுகிறவர்களும் (Demonstrators) முப்பது கண்காணிகளும் (Maistries) வேலை பார்த்து வருகின்றனர். அவர்கள் கைத்தறி நெசவுகாரர்களுக்கு அடக்க விலைக்கு வெள்ளை நூலும் சாய நூல்களும் கொடுத்துவருவதும், புது ரகங்கள் மாதிரி போட்டுக் காட்டுவதும், திருந்திய முறைகளைச் செய்து காட்டுவதும் அவர்களுடைய வேலைகளாகும். அவர்கள் 767 நாட்கள் வெளியூர்களுக்குப் பயணம் போயிருக்கின்றனர்; நெசவு நடக்கும் முக்கிய இடங்களில் 197 ஊர்களுக்குச் சென்றிருக்கின்றனர்; திருந்திய முறைகளில் 561 பேர்களைப் பழக்கியிருக்கின்றனர். 394 புது ரகங்கள் போடும்படி செய்திருக்கின்றனர். 1740 ரூபா பெறுமான நெசவு கருவிகள் விற்றிருக்கின்றனர்.

20 நூற்கடைகளில் (Yarn depots) 26,328 ரூபாவுக்குச் சென்ற மார்ச்சு முடிய நூல் விற்றிருக்கின்றனர். அரசாங்க விற்பனையால் நெசவுகாரர்களுக்கு சௌகரியமிருப்பதால், இன்னும் அதிகமாக 20 கடைகள் வைக்கவும் சாய நூல்கள் வாங்கித்தரவும் உத்தேசித்திருக்கின்றனர்.

Mysore Information.

3. தோட்ட சித்தவன்னகள்ளி தோல் பதனிடும் சாலையில் தோல் பதனிடும் குரோம் முறையும் திருந்திய பதனிடும் பட்டை முறையும் ஆதிகர்னடகர் (சக்கிலியர்) களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பதனிடுவதற்காக 1000 தோல்கள் வந்ததில் 916 தோல்கள் பதனிட்டு முடிந்திருக்கின்றன. தோல் தையல் வகுப்பொன்றும் துவக்கப்பட்டிருக்கிறது. செருப்புக்கள் முதலியன தைக்கவும் கற்பிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஏப்பிரல் முடிய 890 சாமான்கள் செய்து 1093 ரூபாவுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. 8 பெயருக்குத் திருந்திய முறைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சென்னபட்டினத்திலும் (Chennapattina) மத்தூரிலும் (Maddur) மேலக்கோட்டை (Melkote) யிலும் தோலுக்குக் கேடுண்டாகாதபடி தோலையுரிப்பதற்கு ஒரு தோலுரிக்கும் விற்பனரால் (Flayer) 12 பெயர்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர்.

Mysore Information.

4. கிரியூரில் (Hiriyur) 73 பேர்களுக்குப் பிரப்பம் பாய் (Reed mats) பின்னக்கற்றுக் கொடுக்கப்பட்டது. 6500 ரூபா பெறுமான பாய்கள் பின்னி விற்கப்பட்டன. பாய் பின்னுவதில் விற்பனராக வுள்ள ஒருவர் திருந்திய முறையைப் பயிற்றி வருகின்றனர். பாய் பின்னுவதற்கு வேண்டிய கயிறு திரிப்பதற்காக ஒரு புதிய கையெந்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அது மிகவும் பிரயோசனமாயிருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. பயிற்சி பெற்றுள்ள மாணவர்களுக்குப் பாய் பின்னும் தறிகள் கொடுத்து அவற்றின் கிரயத்தைப் பல தவணைகளில் வசூலித்துக் கொள்ளலாமென்றும் உத்தேசித்திருக்கிறது. புருதகுண்டி (Burudagunti) யில் மட்டும் சென்ற ஏப்பிரல் முடிய அந்த வருடம் பூராவும் புதிய முறை 50 பெயருக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

Mysore Information.

5. சீலனீர் (Seelanere) கிராமத்தில் நல்ல மண் ஏராளமாகக் கிடைப்பதால் ஒரு புது மாதிரி செங்கற்சூளை கட்டப்பட்டிருக்கிறது. அதில் 4000 ஓடுகள் முதலில் சுடப்பட்டன. சூரணகள்ளியில் இன்னொரு சூளை கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஒருவர் தன் சொந்தத்தில் ஓடுகள் போட்டுச் சுட்டு வருகிறார். மாதம் 5000 ஓடுகள் போட முடிகிறது. ஓடுகள் பிரியமாய் விற்கின்றன.

Mysore Information.

6. தொட்பல்லப்பூரில் (Dodballapur) கையால் காகிதம் செய்யப்படுகிறது. கடிதங்களாகவும் கவர்களாகவும் நல்ல விற்பனையும் ஆகிறது. கவர்கள் வெட்டும் எந்திரங்கள் பசை தடவுவதற்காகச் சுலப வழிகளும் கையாளப்படுகின்றன.

Mysore Information.

7. தொட்டசித்தவானகள்ளி Dodda-siddavanahalli) யில் கொம்புக் கழிவுகளி லிருந்து பொத்தான்கள் செய்ய உள்ளூர்ப் பையன்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். திருந்திய எந்திரங்கள் கொண்டு சட்டைகளுக்கும் குடுத்துணிகளுக்கும் (Shirts) உதவக்கூடிய பொத்தான்கள் சண்டைச்சங்கத்துக்குச்(War-board) செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று மாதங்களில் 2,000 ரூபா பெறுமான பொத்தான்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Mysore Information.

8. ஆதிவளா (Adivala) வில் தேங்காய் மட்டைகளை ஊறப்போடும் புது முறைகளும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மட்டை நாரை நூலாகவும் கயிறுகவும் திரிக்கவும் முறுக்கவும் ஒரு எந்திரமுமிருக்கிறது.

Mysore Information.

9. குளோசு பேட்டை (Closepat) யில் கழிவு இரும்பில் கொழுக்கள் அடுப்புக்கள் கோடரி முதலியன செய்யக் கற்பிக்கப்படுகின்றன. செய்பொருள்களும் சௌக்கியமாக விற்கக்கூடியதாக முடிகின்றன; எளிதாகவும் விலையாகின்றன. சென்ற ஏப்பிரல் முடிய இந்தத் தொழிலில் 20 பெயர்கள் பயிற்றுவிக்கப் பட்டிருக்கின்றனர். 7335 ரூபாபெறுமான சாமான்கள் செய்யப்பட்டிருக்கின்றன; அவற்றில் 6135 ரூபாபெறுமான சாமான்கள் விற்கப்பட்டு மிருக்கின்றன.

Mysore Information

10. சென்னபட்டினத் (Chennapattina) திலுள்ள கைத்தொழிற் பள்ளியில் புதுமாதிரியான சட்டிபானைகள் வனையக் கற்பிக்கப் படுகிறது. குளோசு பேட்டையில் சீனு மாதிரி (China model) திருந்திய சூளையொன்றும் அமைக்கப் பட்டிருக்கிறது. அங்கே பளபளப்புக் கொடுப்பதற்காக ஒரு சூளையுமிருக்கிறது. இராக்கிங்காம் (Rockingham) பாண்டங்கள் மாதிரி பல பளபளப்பான பாண்டங்கள் செய்யப்படுகின்றன. 1000 ரூபா செலவில் பெரிய சூளையொன்று பளபளப்புக் கொடுப்பதற்காக அமைத்து அங்கே காப்பி தேயிலைக் கிண்ணங்கள் செய்யவும் உத்தேசமிருந்து வருகிறது.

Mysore Information.

11 மள்ளேசுவரத்திலும் (Malleswaram) பெங்களூரில் பீங்கான் பாண்டங்கள் வார்க்கப் பெண்கள் கற்பிக்கப்படுகின்றனர். அவர்கள் நாளொன்றுக்கு அரை ரூபாமுதல் ஒரு ரூபாவரை சம்பாதிக்கின்றனர். மள்ளேசுவரத்தையொட்டி மற்றும் சில கிராமங்களிலும் இந்தத்தொழிலைக் கற்பிக்க உத்தேசித்திருக்கிறது.

Mysore Information.

12. சென்னபட்டினம் சர்க்கார் கைத்தொழிற்பள்ளியில் மெருகெண்ணெய் காய்ச்சவும் (இது பற்றிக் கிராமதூதன் இரண்டாம் மலர் ஆகஸ்டு இதழில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ப-ர்.) கற்பிக்கப்படுகிறது. பன்னிக் குப்பி (Banni Kuppe) யில் விளையாட்டுச் சாமான்கள் செய்ய 20 பையன்கள் பயிற்று விக்கப்பட்டிருக்கின்றனர். மெருகெண்ணெயடிக்கக் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு பஞ்சாப் ஆசிரியரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

Mysore Information.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. பெண்பிள்ளைகளுக்குத் தனிப் பள்ளிக்கூடம் இல்லாத இடங்களில் ஆண் பிள்ளைகள் பள்ளிக்கூடம் இருந்தால், அவற்றில் குறைந்தது நான்கில் ஒரு பாகம் பெண்கள் படிக்கவேண்டும்; இல்லாவிட்டால் அப்பள்ளிக் கூடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அங்கீகாரத்தை எடுத்து விடப்படும் என்ற அறிக்கை கல்வி இலாகா அதிகாரியால் சில

மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

பாலர் கல்வி

2. பெண்களுக்கெனத் தனிப் பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண் பாடசாலைகளிருப்பின், அப்பாடசாலைகளனைத்திலும் சேர்ந்து படிக்கும் பிள்ளைகளின் தொகை, அப்பிரதேசத்தில் படிக்கும் வயது வந்துள்ள (School going age) பெண் பிள்ளைகளின் மொத்தத் தொகையில் 25 சதமானமிருந்தால் போதும்.

R. O. C. No. 636—B/40 . D. P. I

3. சென்னையிலிருக்கும் இந்திய வைத்தியப் பள்ளியின் பாடத் திட்டத்தையும் போதனா முறைப் பரிட்சை முறைகளையும் அனுபவக் கல்விக்குப் போதிய அளவு நோயாளிகள் அங்கேயே தங்குவதற் கவசியமான படுக்கை வசதிகளையும் கவனித்து அறிவிக்கவும் அவற்றைத் திருத்தவோ மாற்றவோ வேண்டுமென்றாலும், அதையும் தெரிவிக்கவும் ஒரு கழகம் சென்ற வருடம் நியமிக்கப்பட்டது.

அந்தக் கழகம் ஆயுர்வேதம் சித்தர் வைத்தியம் யூனானி வைத்தியம் கற்பிப்பதோடு மாணவர்களுக்குத் தற்கால வைத்தியம் கற்பிப்பதுமே அந்தப் பள்ளியின் ஆதி நோக்கமென்றும் நோய் நிர்ணயமும் சிகிச்சையும் கருப்ப வளர்ச்சி முதலியனவும் இந்திய முறைப்படிக்கும் வைத்தியச் சட்டம் பிரசவம் பார்த்தல் இரண வைத்தியம் முதலியன தற்காலமுறைப்படிக்கும் கற்பிக்கவேண்டுமென்றும் மற்றும் பல விபரங்களாயும் அறிவித்திருக்கிறது. அந்த அறிக்கையின் சிபார்சுகளெல்லாவற்றிற்கும் காரணம் சொல்லப்படவில்லை. சில சிபார்சுகள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாதனவாகவுமிருக்கின்றன. இந்திய முறைப்படி கருப்ப வளர்ச்சியைப் படித்துத் தற்கால முறைப்படி பிரசவம் பார்க்கத் தோதுப்படுமா? 1500 வருடங்களுக்கு மேலாக இந்திய வைத்தியத்தில் மாறுதலிருந்ததில்லை. நாளுக்கு நாள் புதுப்புது வியாதிகள் தோன்றவும் அவற்றைக் குணமாக்கும் முறைகளும் திருந்தி வருவதுமாக இருக்கப் பழைய முறைகளை மட்டும் படிப்பதால் பிரயோசனம் இருக்கக்கூடுமென்று நம்புவதற்கில்லை. தற்கால வைத்தியம் படித்தவர்கள் அதன்பின் இந்திய வைத்தியம் படிப்பதும் இந்திய வைத்தியம் படித்தவர்கள் அதன் பின் தற்கால வைத்தியம் படிப்பதும் சாத்தியமில்லை. ஐந்து வருடங்களுக்குள் இரண்டு வைத்தியமும் படித்துவிடக்கூடியதில்லை. தற்கால வைத்தியம் ஒன்றிற்கே ஐந்து வருடங்கள் போதியதாக இல்லை. இந்த நிலைமையில், ஒன்று இந்திய வைத்தியம் மட்டும் கற்றுக்கொடுப்பதாக இருக்கவேண்டும்; அல்லது அதனோடு தற்கால வைத்தியமும் கற்றுக்கொடுப்பதாயிருக்கவேண்டும். (சில வருடங்கள் கூட்டியேனும், இரண்டுங் கற்றுக் கொடுப்பதாயிருக்கவேண்டும். ப-ர்) இவைபற்றி, பொதுசன அபிப்பிராயம் தெரிந்தே, ஒரு முடிவிற்குவர அரசாங்கம் விரும்புகிறது.

Press Communique No. 38

4. கூட்டுறவுச் சங்கங்களின் பொதுநல நிதியிலிருந்து ஆகாயவாணி (Radio) வாங்கிக் கொள்ளலாமென்றும் சென்னை மாகாணக் கூட்டுறவுக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவுக் கழகம் போன்ற கூட்டுறவுச் சங்கங்களும் மத்திய பாங்குகளும் பொதுப்பணத்திலிருந்தே (General Funds) ஆகாயவாணி வாங்கிக் கொள்ளலாமென்றும் அப்படி வாங்கி மேற்பார்வைக் கழகங்களும் பெரிய கிராமச் சங்கங்களும் உள்ள இடங்களில் அவற்றை அமைத்துப் பிரசாரம் செய்து வரலாமென்றும் நகரப் பாங்குகளும் பெரிய கிராமச் சங்கங்களும் தங்கள் சங்க விதிகளைத் திருத்திக்கொண்டு பொதுப்பணத்திலிருந்து ஆகாயவாணி வாங்கிக்கொள்ளலாமென்றும் பதிவாளர் சிபார்சு செய்திருப்பதைச் சென்னை அரசாங்கம் அங்கீகரிப்பதாகத் தெரிகிறது.

The Madras Journal of Co-operation

5. சென்னைக் கூட்டுறவுச் சட்டம் 27-வது விதி 1 வது பிரிவு இ (e) உட்பிரிவுக்குப் பின்னதாக, 'அல்லது அதே சங்கத்திற்கு அல்லது இன்னொரு சங்கத்திற்குப் பாக்கிதாராக இருப்பவர்' என்பதைச் சேர்த்துக் கொள்ள அதே விதி 2 வது பிரிவு இ (e) உட்பிரிவுக்குப் பின், 'அல்லது அதே சங்கத்திற்கு அல்லது இன்னொரு சங்கத்திற்குப் பாக்கிதாரரானவர்' என்பதைச் சேர்த்துக்கொள்ள.

The Madras Journal of Co-operation.
G. O. No. 593. Rev. 24-3-41.

6. மேற்பார்வைக் கழகம் 10 வது விதியின் கீழ், 'நிருவாகக் கழகத்தின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களை மகாசபை எந்தக் காலத்திலும் தீர்மானத்தின் மூலம் விலக்கி விடலாம்' என்றும் 26 (1) விதியில், நிருவாகக் கழக உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தல் என்பதை 'நிருவாகக் கழக உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தலும் விலக்குதலும்' என்றும் திருத்திக்கொள்ள.

R. C. 8199/40—B.
The Madras Journal of Co-operation.

ஈ. கூட்டச் செய்திகள்

1. ஜூலை மீ 20உ யன்று இராசபாளையம் சேவகப் பாண்டிய உயர்தரப் பள்ளியில் அப்பள்ளியின் தலைமையாசிரியர் தலைமையில் அவ்வூர் பழைய பாளையம் தெய்வேந்திரகுல வாலிபர் சங்கத்தின் ஆதரவில் கிராமதூதன் ஆசிரியரால் "இன முன்னேற்றமும் வாலிபர் கடமையும்" பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது. அக்கூட்டத்திற்குச் சுமார் இருபது மைல் சுற்றளவிலுள்ள வெளியூர் உள்ளூர் தெய்வேந்திரகுலப் பிரமுகர்கள் பலரும் சில அபிமானிகளும் வந்திருந்தனர். இன முன்னேற்றப் பிரசாரம் அவ் வாலிபர் சங்கத்தின் துணை கொண்டும் ஒழுக்கத் திருத்தமும் சமூக ஊழியமும் விரதாச்சாரியியக்கத்தின் துணை கொண்டும் பொருளாதார நிலைமையைக் கூட்டுறவியக்கத்தின் துணை கொண்டும் திருத்தமாகவும் விருத்தியாகவுஞ் செய்துவர உத்தேசித்திருக்கிறது. அக் கூட்டத்தின் பயனாக, ஷை உயர்தரப்பள்ளி ஆதி திராவிட மாணவர்களின் உடைக்காகவும் புத்தகங்களுக்காகவும் ரூ 200க்கு மேற்போகாதபடி பொது சனங்களிலிருந்து வசூலாகுமளவு அரசாங்கமும் இனும் கொடுத்து வருவதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வீட்டுக்கு ஒரு அணாவாக வேணும் ரூ 50க்குக் குறையாது வசூலித்துக் கொடுப்பதென்றும் தீர்மானமாயிருக்கிறது. பழைய பாளையம் தெய்வேந்திரகுலத்தாருக்குச் சொந்தமான இடத்தில் பொதுத் தண்ணீர்ப் பந்தல் ஒன்றும் வாசகசாலையொன்றும் நடத்திவரவும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

12. அறிவுரைத் திரட்டு.

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. இலங்கையில் இந்தியச் சரக்கு இறக்குமதிச் சட்டம்:—இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போகும் விபசாயப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் ஒவ்வொன்றாக முளைத்துக் கொண்டிருக்கின்றன. கடுகு இறக்குமதி செய்பவர்கள் இந்தியாவிலிருந்து எவ்வளவு மூட்டைகளை இறக்குமதி செய்து கொள்ளுகிறார்களோ அவ்வளவு மூட்டை இலங்கைக் கடுகையும் வாங்கிக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டுமென்று விபசாயப் பொருள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் இலங்கைக் கடுகை முதலில் விலைக்கு வாங்கிக் கொண்ட வியாபாரிகளுக்கு மட்டுமே, அதே அளவு கடுகை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள அநுமதிச் சீட்டு வழங்கப்படும். இஞ்சி, மஞ்சள், முதலியவற்றிற்கு இதே போல் கட்டுப்பாடு

உத்தரவுகள் இத்தகைய உத்தரவின் கீழ் கொண்டுவர அதிகாரிகள் இப்பொழுது ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

வர்த்தக ஊழியன்.

2. களைகளால் விளையும் கேடுகள்:— பயிர்த் தொழில் செய்கிறவர்களுக்கு அப்போதைக் கப்போது ஏற்படுகிற கட்ட நட்டங்களுக்கு அளவே யில்லை. பருவ மழை யில்லா விட்டாலும் சங்கடம்; அதிக மழை பெய்தாலும் சங்கடம். பூச்சி, புழுக்கள் சில காலங்களில் பயிர்களை அழித்து விடுகின்றன. விளையும் பயிர்களுக்கு விரோதியானவைகளில், புற் பூண்டுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

களைகளால் சுமார் பன்னிரண்டு தொல்லைகள் உண்டாகின்றன.

1. இக்களைப் பூண்டுகள் தம்முடைய வளர்ச்சிக்காகப் பூமியிலுள்ள ஈரத்தைக் கவர்ந்து பயிராக்கப் பட்ட விளைச்சலுக்குப் போதுமான ஈரமில்லாமல் செய்து விடுகின்றன.

2. விளை பயிருக்கென்று பிரத்தியேகப் படுத்தப்பட்ட பயிருணவைக் களைகளும் உண்டு விடுகின்றன.

3. பயிர்ச் செடிகளை ஓங்கி வளரவொட்டாமல் அவற்றை அமிழ்த்திப் போடுகின்றன. சிறு செடிகளா யிருக்கும் பொழுது இவ்வாறு பாதிக்கப்படுவதால், பின்னர் பயிர் செழிப்பதில்லை.

4. களைகளால் குடியானவனுக்கு எப்பொழுதும் எல்லா விதங்களிலும் செலவு அதிகமாகும்; பூமி, செய்நேர்த்தி, விதைப்பு, பின்செய் நேர்த்தி, அறுவடை, சரக்கு விற்பனை முதலிய ஒவ்வோரினத்திலும், செலவு அதிகமே யாகும்.

5. தோட்டங்களில் சோளப் பயிரில் விழுகிற பல்லிப் பூண்டு, புகையிலையில் காண்கிற போடு முதலிய களைப்பூண்டுகள் சில பயிர்களை மாறி மாறி ஒரே நிலத்தில் பயிரிடவொட்டாமலும் செய்து விடும்.

6. சில களைப் பூண்டுகள் ஊமத்தை, நெரிஞ்சி போன்றவை ஆடுமாடு முதலிய கால் நடைகளுக்கு நஞ்சாகின்றன.

7. கறவை மாடுகளின் மேய்ச்சல் தரைகளில் உள்ள சில களைச் செடிகளையும் அவை மேய்ந்து விடுவதால் பால் உருசி கெட்டுப் போவதுண்டு.

8. தானியங்கள் புல் வைக்கோல் முதலியன, களைப் பூண்டுகளாலும் விதைகளாலும் தரங்கெட்டுப் போகின்றன. களை பிடித்த பூமியின் விலையும் கம்மிப்படும். சுத்தமான நிலத்திற்கு மதிப்பும் கிரயமும் எப்பொழுதும் அதிகம்.

9. பல்லிப்பூண்டு, போடு, மா, நெல்லி, நாரத்தை முதலிய செடிகள் மரங்களில் காண்கிற புல்லுருவிகள் சில தண்டச் சோற்றுத் தடிராமன்கள் உண்ட வீட்டிற் கிரண்டகஞ் செய்வது போல் தங்களுக்கு உணவளிக்கும் செடி கொடி தாவரங்களை அடியோடே மடியச்செய்து விடுகின்றன.

10. நாசகாரிகளான புழு பூச்சி நோய் நொடிகளுக்கு இடங் கொடுக்கிறவைகளா யிருந்து அவற்றை விருத்தியாவதற்கு இலாயக்கா யிருப்பதால் நட்டத்தை விளைவிக்கின்றன. உதாரணமாக, உருளைக் கிழங்கில் 'முன் சனி' (Early Blight) என்ற நோய் ஊமத்தையிலும் காணப்படுவதால், கிழங்குப் பயிரைத் தாக்கக்கூடும்.

11. நீண்ட கூர்மையான உறப்பு முட்களுடைய களைச் செடிகள் கால் நடைகளைப் பாதிக்கக் கூடும். ஒட்டுப் பூண்டு, புல் விதை முதலியவை விலை மதிப்புள்ள நல்ல கம்பளி மயிரில் ஒட்டிக் கொள்ளுவதால் அச்சரக்கைக் கெடுத்து விடக் கூடும்.

12. களைப் பூண்டுகளின் விதைகள், காற்று மழை பறவைகள் முதலியவற்றால் பரவச் செய்யப்படுகின்றன. பயிர் விதைகள் சுத்தமாகச் சேகரிக்கப் படாததாலும், கன்று

காலிகள் ஆடுகள் முதலிய பிராணிகள் கழிக்கிற மலத்தினுலும், உழவு முதலிய பண் படுத்தும் கருவிகளாலும், சேகரித்து வைக்கும் சாக்குப் பை குதிர் முதலியவைகளை நன்ருய்ப் பரிசோதிக்காததாலும் இக் களைச் செடி கொடி புல் பூண்டு முதலியவற்றின் விதைகள் விருத்தியாகின்றன. ஆகையால், முன் கவனம் அவசியம்.

வர்த்தக ஊழியன்.

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

வசிக்கப் போதிய இடமும் குளிர் தாங்கப் போதிய உடையும் உண்ணப் போதிய உணவும் உடையவன் சேமமாக வாழ்கிறவனு? உண்ணப் போதிய உணவும் உடுக்கப் போதிய உடையும் இல்லாமல் ஒழுகும் கூரைவீட்டில் குடியிருந்து கொண்டு விளைந்ததையெல்லாம் வட்டிக்கும் வாடகைக்குமாக விற்றுக் கொடுக்கிறவன் சேமமாக வாழ்கிறவனு? விளைந்ததை விற்கிறவனல்ல, தாராளமாக உண்கிறவனே சேமமாக வாழ்கிறவன். இந்த மாதிரி, புள்ளிக்கொத்ததே நாட்டிற்கும் ஒத்ததாகும். எந்த நாடும் விளை பொருளை ஏற்றுமதி செய்ய விரும்புவதில்லை; அதிகமாக அதனை உண்டு களிப்பதையே விரும்பும். நாம் முன்னிலும் அதிகமாக விளைவுகளைப் பிற நாடுகளுக்கு விற்கிருேமென்ருல், அதிலிருந்து நாம் சேமமாக இருக்கிறதென்று அருத்தமாகும்?

இப்போதைய சனத்தொகை பத்து வருடங்களுக்கு முன் இருந்ததற்கும் பதினைந்து சதமானம் கூடியிருக்கிறது. சருக்கரை மண்ணெண்ணெய் தபால் கார்டு இவற்றிற்காக நம் நாட்டில் செலவாகும் தொகை முன்னிலும் குறைந்திருக்கிறது. மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. சாதாரண சனங்களின் வரவு சௌகரியமாக இருந்தால், அவர்கள் இந்த இனங்களிற் செலவழிக்கும் செலவும் தாராளமாக இருக்கும். பத்து வருடங்களுக்கு முன் இருந்ததற்குச் சனத்தொகை கூடியிருக்கிற பொழுது, அந்த அளவிற்கேனும் இந்த இனங்களின் செலவு கூடியிருக்க வேண்டும். அப்படியும் கூடாமல், பத்து வருடங்களுக்கு முன் இருந்தபடியும் இராமல், அதற்கும் குறைந்திருக்குமென்ருல், நம் நாட்டின் சனங்களின் பொருளாதார நிலைமை முன்னிலும் குறைந்திருக்கிறதென்று தானே சொல்ல வேண்டும்?

சண்டையென்ருல் எவருக்கும் நல்லதில்லை. அதுவும் சண்டையில் சம்பந்தப்பட்டிருக்கும் தேசங்களுக்கு விருத்தியென்பதிருக்கக் கூடியதில்லை. என்ருலும், நமது அரசாங்கம் தேசிய அரசாங்கமாக இருக்குமென்ருல் சண்டையினுலேற்படும் கெடுதிகளையும் நட்டங்களையும் கூடிய வரை குறைத்து வரவும் செய்யும். இப்பொழுது சண்டைக்காகச் செய்யும் ஏற்பாடுகள் சண்டை முடிந்த பின் நாட்டின் விருத்திக்குதவக் கூடியதாகவும் அவற்றை இப்பொழுதே கவனித்து அமைத்து வரும்.

வங்காள விபசாயிகள் சணலைவிற்று அரிசி வாங்க வேண்டியதிருக்கிறது. தாழ்ந்த தரப் பருத்தியையெல்லாம் வெளி நாடுகளுக்கே விற்க வேண்டியதிருக்கிறது. நம் நாட்டில் வெண்ணெய்யும் கொழுப்பும் குறைவாயிருக்கும் பொழுது, நிலக் கடலையையும் மற்றும் எண்ணெய் வித்துக்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிருேம். நம் காலுக்கு மிதியடியில்லாத பொழுது பதனிட்ட தோலையும் பதனிடாத தோலையும் வெளி நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிருேம்.

அரசாங்கம் நம்முடையதாக இருக்குமென்ருல், நமக்கு வேண்டாதிருப்பதை மட்டும் அது செலவாகக் கூடிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்வோம். நமக்குத் தேவையா

யிருப்பதை அனுப்பவே மாட்டோம்; செய் பொருள்களாகச் செய்து நாம் உபயோகிக்கக் கூடியதை உபயோகித்து விற்கக் கூடியதை விற்போம். அதனால், அந்தக் கூலியும் நம் நாட்டினருக்கே சேரும். நிலக் கடலையும் எண்ணெய்யும் நம் நாட்டிலேயே இருந்தால் நமக்குதவும். பிண்ணாக்கும், மாடுகளுக்கும் உரத்திற்கும் உதவும்.

நாம் ஏற்றுமதி செய்யும் பொழுது அதனால் சமுசாரிக்கு நல்லவிலை கிடைக்கிறதாவென்றேனும் பார்த்துக்கொள்ள வேண்டும். நிலக்கடலைக்கு ஆரம்பத்தில் அப்படி நல்லவிலை கிடைக்கவில்லை. நம் நாட்டில் சருக்கரை ஏராளமாக மிஞ்சியிருக்க அதை விற்பதற்கான ஏற்பாடு அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. பிரிட்டிசு சாம்பிராச்சியத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளின் சருக்கரையை நல்லவிலைக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்த காலத்திலும், நம் நாட்டுச் சருக்கரையைக் கவனிப்பாரில்லை.

நம்மரசாங்கப்பணம் சீமையில் 145கோடி ரூபா இருந்ததை நம்முடைய நாட்டின் கைத்தொழில் விருத்திக்காக உபயோகித்திருக்கலாம். அப்படியும் உபயோகிக்காமல், நம் நாட்டின் செலவுகளுக்கு வேண்டிய பணமும் கடன் வாங்கிக் கொண்டிருக்க, வெகு காலத்திற்குப் பின் சீமைக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்கு இந்தத் தொகையைச் செல்லுவைத்துக் கொள்ளும்படி சொல்லிவிடுவதென்றால் அருத்தமென்ன? இப்படிச்சங்கடகாலத்தில் நம்மிந்தியா பிரிட்டனுக்கு உதவியாயிருப்பதற்காகவேனும் நம் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப் பிரிட்டன் விரும்பவில்லையென்று தானே சொல்ல வேண்டும்?

Hindustan Times. G. D. Birla.

இ. இலக்கிய இலக்கண அருங்கலைக் கல்வி யாராய்ச்சிக் குறிப்புக்கள்

1. இலக்கணமும் இலக்கியமும் சேர்ந்தது இயற்றமிழ்; அதனோடு இராகமும் தாளமும் சேர்ந்தது இசைத்தமிழ்; அதனோடு அபிநயமும் ஆட்டமும் சேர்ந்தது நாடகத் தமிழ்.

தேவநேசன்.

2. தமிழில் பேச்சே கெட்டுப்போயிருப்பது மூன்று விதத்தில். ஒன்று கொச்சைப் பதங்களுக்கு அளவுக்குமிஞ்சி இடம் கொடுத்து வருவது; இரண்டாவது அங்கில மொழிகளைத் தயக்கமின்றி எல்லாக் காரியங்களுக்கும் எல்லாச் சமையங்களிலும் கலந்து பேசும் வழக்கம். மூன்றாவது, பேசும்பொழுது கையையும் தலையையும் ஆட்டி, பேச்சுக்குப் பதிலாக உடலை உபயோகித்துப் பேச்சை நடத்தும் வழக்கம்.

இவை மூன்றும் பேச்சை அவலட்சணமாகச் செய்வதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்; ஆனால், அது நம்முடைய இலக்கிய வளர்ச்சியைத் தடுத்துவரும் இரகசியத்தை அனைவரும் காணமாட்டார்கள். இரண்டாவதாகச் சொன்ன காரணம் மிகவும் முக்கியமான விடயம். பலவேறு விடயங்களை அறிந்தும் ஆராய்ந்தும் வரும் தமிழர் தாங்கள் சாதாரணமாகப் பேசும்பொழுது முழுதும் தமிழ் மொழிகளாகவே பேசினால் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும். விடயங்களைப் பேசும் பொழுது தமிழ்மொழி தெரியாத இடத்திலும், மறந்துபோன இடத்திலும், புதுத் துறைகளில் ஆராய்ச்சி செய்யும்பொழுதும், வாதப் பிரதிவாதம் செய்யும்பொழுதும், அறிவையும் நினைவையும் செலவழித்துத் தமிழ் மொழிகளைத் தேடி உபயோகிப்பதற்குப் பதில், எளிதில் கிடைக்கக்கூடிய அங்கில மொழிகளை, அதாவது பிறதேசத்தார் கட்டப்பட்டுத் தங்களுக்கென்று உண்டாக்கியிருக்கும் மொழிகளை எவ்விதக் கூச்சமுமின்றி இடையிடையே கலந்து பேச்சு நடத்திவிட்டுத் தமிழுக்குச்

சோறு போடாமல் கொல்லுகிறோம். சோம்பேறிகளைப் பெற்ற தாயைப்போல் தமிழ் அவதிப்பட்டு வருகிறது. அன்னம் ஊட்டாத தேகம் எப்படி வளரும்? நுட்பமான பொருட்பேதங்களும் அவைகளுக்குத் தகுந்த மொழிகளும் நடையும் ஒரு மொழியில் எவ்வாறு தோன்றி உயிருடன் நிற்கும்? பொருளைப் புகுத்திப் பேசிப் பழகி வந்தால்தானே மொழி வளம்பெறும். கிடைத்த புல்லையும் தவிட்டையும் அங்கில மாட்டுக்கே போட்டுவந்தால் நம்முடைய பசு எவ்வாறு பால் கொடுக்கும்? கொஞ்சம் தடை தோன்றிய இடங்களிலெல்லாம் அங்கிலத்தைப் போட்டு நிரவிப் பேச்சை ஓட்டிக்கொண்டுபோனால், தமிழ் எங்ஙனம் வளரும்? அறிஞர்க ளெல்லாம் தமிழைக் கொல்லுவதற்காகச் சதியாலோசனை செய்தாலும் இதைவிட வேறு யுத்தி கண்டுபிடிக்க முடியாது.

இக்காலத்தில் தமிழ் பேசுகிறவர்கள் பேசும் நடைக்கு உதாரணம் பாருங்கள்:— தன்னைத்தான் அறியவேண்டும். அவ்வப்போது Introspection செய்வது நல்லது; ஆனால், morbid ஆகப் போகக்கூடாது. பிடிவாதமாகத்தான் ஒரு கட்சியில் வேலை செய்ய வேண்டும்; அதில் தவறு ஒன்றுமில்லை; ஆனால், செட்டியார் வரவர ரொம்ப narrow minded ஆகப் போய்விட்டார் அல்லவா? அதுதான் என்னுடைய objection. ராதாகிருஷ்ணன் ரொம்பக் கெட்டிக்காரன்; யோக்கியன்; ஆனால், steadiness போதாது. அவன் failureக்கு அதுதான் explanation. காதல் மணம் எல்லாம் ரொம்ப சரிதான்; ஆனால், நம்ம தேசாசாரத்தில் love க்கு எங்கே இடம்? sex-feeling எல்லாம் love ஆய்விடுமா? Indian art ஐப் பற்றித் தமிழில் எழுதுவதை விட இங்கிலீசில் எழுதுவது எனக்குச் சுலபமாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் என்ன? சீதம்மாள் நன்றாகத்தான் பேசுகிறாள்; ஆனால், ஒவ்வொரு சமையம் ரொம்ப bearing ஆகப் போய்விடுகிறாள். மனித வாழ்க்கைத் தருமங்களெல்லாம் imitation பேரில்தான் உண்டானது என்று psychologists சொல்லுகிறார்களே, உங்கள் opinion என்ன? ஜெர்மனிக்காரன் யமன், propaganda விலேயே பாதி யுத்தம் முடித்து விடுகிறான். உங்களுடைய மகள் health இப்போ எப்படி? ஒரு வாரமாகக் கொஞ்சம் setback ஆயிற்று; ஆனாலும், பரவாயில்லை. டாக்டர் hopeful ஆகத்தான் சொல்லுகிறார்.

தமிழ்நாட்டில் படித்த மேதாவிகளும் அநுபவம் கண்ட பெரியோர்களும் தங்களுடைய சாதாரணப் பேச்சுக்களில் அங்கிலம் கலக்காமலும் அங்கசேட்டைகள் இல்லாமலும் இரண்டு ஆண்டு தவம் இருந்தார்களானால்-அத்துடன் வயல்களிலும், கடைத் தெருவிலும், ஏழைகள் வீட்டிலும், பாமர மக்கள் பேசும் பேச்சில் ஒன்றாகக் கலந்துகொள்ளக் கற்றார்களானால், தமிழ் வசன நடை தானாகவளம் பெறும். வசனம் என்றால் பேச்சா எழுத்தா என்ற கேள்வியே கிளம்பாது"

இராசகோபாலாச்சாரியார்.

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I சீவசத்தி: சீவசத்தியைக் காப்பாற்றுங்கள். மாணவர்களே, மாணவிகளே, பள்ளிப் பருவத்தில் நீங்கள் பிரம்மச்சரிய விரதம் உறுதியாகக் காக்கவேண்டும். ஆண் குறைந்தது இருபத்திரண்டு வயது வரையில், பெண் பதினாறு வயது வரையில் பரிசுத்தமாக வாழ்ந்து அறிவாற்றல்களை வளர்க்க வேண்டும். தீய செயல், தீய நினைப்பு, தீய சேர்க்கையால், சீவ

சத்தி வீணுகி உடல் நோயுற்றழியும். வாழ்வில் இன்பம் அடைய விரும்பினுல், இளமையூற்றை வீணுக்காது பிரம்மச்சரிய விரதம் பூணுங்கள்; மனத்தை உயர்த்துங்கள். சிந்தையை அடக்குங்கள். பேச்சு, நடத்தை, ஊண், ஊக்கம், படிப்பு, கேள்வி, நினைப்பு, குறிப்பு அனைத்திலும் மாசற்ற நன்னெறியைப் போற்றுங்கள். வாழ்வைத் தரும சாதன மாக்குங்கள். இளமைப் பருவத்தில் அறிவுத்தவஞ் செய்யுங்கள். கல்வியில் கருத்தூன்றிப் பல கலைகளையும் பயிலுங்கள்; புலன்களை அடக்கி, மனத்தை உட்குவித்து, நல்லாசானை அண்டி, நல்லோருடன் சேர்ந்து அறிவுடனும் திறமையுடனும் அடக்கத்துடனும் கலைகளை, தொழில்களைப் பயிலுங்கள். தூய எளிய வுணவை யுண்ணுங்கள். ஆகார நியமம் சித்த சுத்திக்கு ஒரு சாதனமாகும். நேரத்தைப் பொன்னே போல் போற்றுங்கள். ஒரு மூச்சு வீணுக்கில் உங்கள் வாழ்வின் நுனி வெட்டுண்டது போலுணரவேண்டும். ஒரு தீய செயலைச் செய்தால் பட்டினியிருந்து வருந்தி அதை மீண்டும் செய்யாதிருக்க வேண்டும். அறிவு, புலமை, உடலுறுதி, மனத்திண்மை, ஆற்றல். ஆயுள், ஆரோக்கியம், அமைதி, இன்பம் காரியசித்தி—எல்லாம் பிரமச்சரியத்தால் உண்டாகும். பத்து முதல் இருபது வயதில் பிடிபட்ட பழக்கங்கள் ஆயுள் முழுதும் விடா. மனித வாழ்வின் அடிவரிசை அமையும் பருவம் அதுவே. அப் பருவத்தில் சீவசத்தியைப் பெருஞ் செல்வத்தைப் போலக் கருதி வளர்க்க வேண்டும்; ஒரு துளிசத்தி என்பது துளி நல்ல இரத்தத்திற்குச் சமானம். பிரமச்சரிய வாழ்விற் பிழை யுண்டாலுல், இல்லற வாழ்வு துன்புறும். வாழ்வின் வேர் பிரமச்சரியம்; கிளை இல்லறம்.

நல்வழி.

II. தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைபடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
வாணிபம்.

பட்டினப்பாலை.

III. 1. ஈழமும் கொங்கும் எதிர்த்து மின்னுது, பள்ளத்திலிருக்கிற குடிலை மேட்டிற்போடு.
2. கோடையிடியும் மாரி மின்னலும் மழை அதிகம்.
3. ஆவணி மாதம் அஞ்சாந்தேதி சிங்க முழங்கினுல் மழை.
4. தெற்கே போன வெள்ளி வடக்கே வந்தால் மழை.
5. கும்பத்து வெள்ளி குடம் கொண்டு சாய்க்கும்.
6. குறையச் சொல்லி நிறைய அள.
7. கொடிக்குக் காய் கனக்குமா?
8. கோழி மிதிக்கக் குஞ்சு முடமாகுமா?
9. பிள்ளையை அடித்துவளர்· பெண்ணைப் போற்றிவளர்.
10. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
11. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
12. அள்ளாதது குறையாது; சொல்லாதது பிறவாது.
13. இட்டுக் கெட்டவரில்லை; இடாது வாழ்ந்தவரில்லை.

14. கெட்டார்க்கு உற்றார் கிளையிலுமில்லை.
15. கீரை வேர் பிடுங்க ஏலேலோப் பாட்டா?
16. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
17. புலிக்குப்பிறந்து பூனையாகுமா?
18. குறைகுடம் தளம்பும்; நிறைகுடம் தளம்பாது.
19. இல்லாதவனே பொல்லாதவனே.
20. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.

IV. அ "கண்ணினது குளிர்ந்த பார்வையே அரும்பு, இனிய முகமே புதுமலர்; உண்மையாகிய இன்சொல்லே மதுரமான காய், கொடையே பழம். ஆகிய இக்நன்மைகள் மிகுந்ததன்மையுடையாரே சலித்தலில்லாத கற்பகத்தரு ஆவர்."

நீதிநெறி விளக்கம்.

ஆ. எவனும் வாழ்க்கைக்குரிய தொழில் அற்றார்க்கும், நோய் கோட்பட்டார்க்கும் துன்பமுடையார்க்கும் தன் ஆற்றற் கியைந்தவாறு துணை நின்று உபகரித்தல் வேண்டும்.

இ. எவனும் தனக்குத் தீங்கிழைக்கும் பகைவனுக்கும் உதவி செய்யும் குணத்தையும், தனக்குவரும் வாழ்விலும் தாழ்விலும் ஒரு நிலைப்பட்ட மனத்தினையும் உடையவனாக இருத்தல் வேண்டும்.

பண்டிதமணி மொழி பெயர்ப்பு. சுக்கிரநீதி.

ஓர் விடு கதை.

வெண்பா.

நற்சமுக ஊழியமே நாடிடுவான் மக்களுக்குள்
உற்சாகம் ஓங்க உணர்த்திடுவான்—பொற்சிகரம்
போன்றதொழில் கல்விநலம் போதிப்பான் வேளாண்மைக்
கான்றதுணை யாவான் அவன்!

இவன் யார்? கிராம தூதன்.